Registered as a News Paper in Sri Lanka

# தினக்கதிர்

தினசரி

THINAKKATHIR DAILY

ஒளி - 01 - கதிர் - 330 22.03.2001 வியாழக்கிழமை பக்கங்கள் - 08 விலை ரூபா 5/

உங்களுக்குத் தேவையான
உத்தரவாதமுள்ள
தங்க நகைகளுக்கு
சிறந்த இடம்
ஸ்ரீ உமையாள்
ஜீவல் ஹவுஸ்
மார்க்கட் றோட், பட்டிருப்பு -
களுவாஞ்சிக்குடி. Advt.

## முல்லைக் கடலில் டோரா படகுகள் மூழ்கடிப்பு 7 கடற்படையினர் பலி,ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டது.

(நமது நிருபர்)

முல்லைக்கடற்பரப்பில் விடுதலைப்புலிகள் கடற்படையினர் மீது மேற்கொண்ட தற்காப்புத் தாக்குதலால் கடற்படையினரின் இரு டோராப்படகுகள் மூழ்கடிக்கப்பட்டுள்ளன. மற்றும் இரு படகுகள் சேதமாக்கப்பட்டுள்ளன. அத்துடன் ஏழு கடற்படையினர் பலியானதுடன் புலிகள் தரப்பிலும் மூவர் மரணமடைந்துள்ளனர்.

அத்துடன் ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. முல்லைக் கடற்பரப்பில் நேற்றுக் காலை விடுதலைப் புலிகளின் கடற்படகுகள் மீது கடற்படையினர் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இத் தாக்குதலையடுத்து தற்காப்பு தாக்குதலில் கடற்புலிகள் ஈடுபட்டனர். இத் தாக்குதலில் கடற்படையினருக்கு சொந்தமான அதிவேக டோராப் படகு ஒன்றுகைப் பற்றப்பட்டு அப்படகில் இருந்த ஆயுதங்கள் களையப்பட்ட பின் இரு டோராபடகுகளை புலிகள் நிர்மூலமாக்கியுள்ளனர். அத்துடன் மற்றுமிரு டோராப்படகுகள் சேதமாக்கப்பட்டுள்ளன.

இத் தாக்குதலில் ஏழு கடற்படையினர் பலியாகியுள்ளனர் விடுதலைப் புலிகள் தரப்பில் மூவர் மரணமடைந்துள்ளனர்.

இத்தாக்குதலில் பின்வரும் ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

23.மி.மீ.கனோன்-01, 20 மி.மீ.கனோன்-01,40 மி.மீ.தானியங்கி கிரனைட் லோஞ்சர்-02,பெல்ஜியம் 50 கலிபர்-02, பி.கே இயந்திரத் துப்பாக்கி-04,ஏ.கே.,எல்எம்.ஜி,ரக துப்பாக்கி-01,இயந்திர துப்பாக்கி-01, மற்றும் வெடி பொருட்கள் மற்றும் சாதங்கள் என்பனவும் கைப்பற்றப் பட்டதாக வன்னிச் செய்திகள் தெரிவிக்கின்றன.

மக்கள் அபயக்குரல்! மீன் பிடிப்படகுகள் நாசம்! வீடுகள் சேதம் !

# வன்னியில் போர் விமானங்கள் குண்டு வீச்சு! நால்வர் பலி; பதினொரு பேர் காயம்!

(நமது வவுனியா நிருபர்)

**வன்னி கிழக்குப் பகுதியில் நேற்று போர் விமானங்கள் குண்டு வீச்சு தாக்குதலை நடத்தியுள்ளன. இத்தாக்குதலில் நான்கு அப்பாவிப் பொது மக்கள் பலியாகியுள்ளனர்.பதினொரு பேர் படுகாயமடைந்துள்ளனர்.**

நேற்று காலை அடுத்தடுத்து தொடர்ச்சியாக நடத்திய இந்தக் கோர குண்டு வீச்சுத்தாக்குதலில் காயமடைந்த கொல்லப்பட்ட மக்களை அப்புறப்படுத்த முடியாதளவிற்க்கு இத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

விமானப் படையினரும் கடற்படையினரும் கரையோர மக்கள் குடியிருப்புக்களை இலக்கு வைத்து தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.இத் தாக்குதலில் சுண்டிக்குளம் பகுதியில் நான்கு அப்பாவிப் பொது மக்கள் உயிரிழந்ததுடன் ஒன்பது பேர் படுகாயமடைந்துள்ளனர்.

காலை ஒன்பது மணிக்கு நடத்தப்பட்ட இந்த தாக்குதலைத் தொடர்ந்து முற்பகல் 11.30மணியளவில் புதுமாத்தளம் பகுதியில் நடத்தப்பட்ட தாக்குதலில் இரண்டு அப்பாவிப் பொது மக்கள் படுகாயமடைந்துள்ளனர்.

**மக்கள்அவலக்குரல்!**

இந்த தாக்குதலின் போது மக்கள் அவலக்குரல் எழுப்பியவாறு குழந்தைகளை தூக்கிக் கொண்டு கையில் அகப்பட்ட பொருட் களை எடுத்தவாறும் இந்தப் பகுதியில் இருந்து அவசர அவசரமாக இடம் பெயர்ந்துள்ளனர்.

**படகுகள் சேதம்**

இதன் போது பல மீன் பிடிப் படகுகள் எரிந்து நாசமாக்

(8ம் பக்கம் பார்க்க)

## பொது மகன்மீது மோதிய 'பவள்'சாரதிக்கு அபராதம்

(எஸ்.கமலதாஸன்)

இராணுவ 'பவள்' கவச வாகனம் ஒன்று மோதியதில் பொதுமகன் ஒருவர் காயமடைந்த சம்பவம் தொடர்பாக 'பவள்' சாரதிக்கு மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றம் ஐயாயிரம் ரூபா அபராதம் விதித் துள்ளது.

1999 ஆம் ஆண்டு

(8ம் பக்கம் பார்க்க)

## மாந்தீவு வைத்தியசாலை தொடர்பாக ஜோசப் எம்.பி.சுகாதார அமைச்சருடன் பேச்சு!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாந்தீவு தொழுநோயாளர் வைத்தியசாலையை மூடுவது தொடர்பாக எடுக்கப்பட்ட தீர்மானம் குறித்து மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராசசிங்கம் நேற்று சுகாதார அமைச்சர் எல்.டீ.ஜே. செனிவரெத்தினாவை சந்தித்து பேச்சுக்கள் நடத்தியுள்ளார்.

(8ம் பக்கம் பார்க்க)

## கொழும்பு தமிழ்ச் சங்க ஸ்தாபகர் வாரம்

(நமது நிருபர்)

கொழும்பு தமிழ் சங்கத்தின் ஸ்தாபகர்வாரம் இன்று தொடக்கம் 25ம் திகதி ஞாயிற்றுக் கிழமை வரை கொழும்பு தமிழ்ச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இன்றைய நிகழ்வில் வில்லுப்பாட்டு,ஆய்வரங்கு, கவியரங்கு,பட்டி மன்றம், நாட்டிய நாடகம் ஆகியவை இடம் பெறும் அத்துடன் 'பனைநூறு'கவிதை நூலும் தமிழ்ச் சங்க செய்தி மடலான 'ஓலை'வெளியீடும் இடம் பெறும்.

## இந்து சமய பண்பாட்டுத் திணைக்கள தெய்வநாயகம் விடுதலையானார்

(கொழும்பு)

கடந்த 98ம் ஆண்டு ஜீலை மாதம் கைது செய்ய ப்பட்டு 8 மாதங்கள் தடுப்பு காவலில் வைக்கப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டிருந்த இந்துசமய பண்பாட்டலுவல்கள் திணைக்கள உதவி இயக்குனரான ஏறாவூரைச் சேர்ந்த தெய்வநாயகம் நேற்று விடுதலையானார்.

கொட்டேனாவில் வை த்து

(8ம் பக்கம் பார்க்க)

## சமுர்த்தி ஊழியர் தற்கொலை

(பழுகாமம் நிருபர்)

முனைத்தீவைச் சேர்ந் த சமுர்த்தி ஊழியரான நாராயணப் பிள்ளை நீர்மலாவதி கடந்த 26ந் திகதி இரவு தற்கொலை செய்து கொண்டுள்ளார். வீட்டினுள் கயிற்றைக் கட்டி தற்கொலை செய்து கொண்டதாகக் கூறப் படுகிறது.எவ்வித பிரச்சினையும்

(8ம் பக்கம் பார்க்க)

## அன்ரன்-எரிக் லண்டனில் பேச்சுவார்த்தை! போர் நிறுத்தம் நீடிப்பு தொடர்பாகவும் ஆராய்வு

(நமது நிருபர்)

நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தை நேற்றுக் காலை லண்டனில் சந்தித்து பேச்சுக்கள் நடத்தியதாக தெரிவிக்கப்படுகிறது.

இப்பேச்சு வார்தையின் போது விடுதலைப் புலிகளின் போர் நிறுத்த நீடிப்பு புரிந்துணர்வு உடன்படிக்கை கண் காணிப்பு குழுவினை நியமித்தல் போன்ற விடயங்கள் குறித்து ஆராயப்பட்டதாக வெளிநாட்டு அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை நேற்று முன் தினம் பிறேசிலில் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்கா நோர்வேயின் வெளியுறவு அமைச்சரை சந்தித்து இலங்கை விவகாரம் தொடர்பாக பேச்சுகள் நடத்தியுள்ளனர்.

இச் சந்திப்பின் போது நோர்வேயின் சிறப்பு தூதுவர் சொல்ஹெய்மும் உடன் சென்றிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இச்சந்திப்பின் போது சமாதானப் பேச்சுக்கள் தொடர்பாக இரு தரப்பினரும் ஆராய்ந்ததாகவும் அரசு புலிகள் தொடர்பாக நோர்வே அரசு மேற்கொள்ளும் சமாதான பேச்சுதொடர்பாக ஊடகங்கள் வெளியிடும் மிகைப்படுத்தப்பட்ட செய்திகள் தொடர்பாக சொல்ஹெய்ம் கவலை அடைந்த தாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வெளிநாட்டு
வேலை வாய்ப்பு
சவூதி அரேபியாவில்
ஆண்களுக்கு:-

| | SR |
| --- | --- |
| ஓட்டோ மெக்கானிக் | 800 |
| ஓட்டோ எலக்ரீஷியன் | 800 |
| ஓட்டோ பெயின்ரர் | 800 |
| ஓட்டோ ரிங்கர் | 800 |
| பாமர் , | 600 |
| பிளம்பர் | 800 |

தங்குமிடம், மருத்துவம் இலவசம்
உடனடிப் பயணம்
நியூபாஹிம் என்டர் பிரைஸஸ்
LL No 736
283/1, மெயின் வீதி,
புறக்கோட்டை
காத்தான்குடியில்
டிக்கட்டுக்களுக்கு
151/1, 15/2 பிரதானவீதி
காத்தான்குடி-02
தொ.பே:065-47090 ADVT.

## வழிப்பறிக் கொள்ளை நபர்களுக்கு 27வரை விளக்க மறியல்

(ஏறாவூ நிருபர்)

அம்பாறை இறை காமம் பகுதியில் வழிப்பறிக் கொள்ளையில் ஈடுபட்டு வந்த இரண்டு பெண்

(8ம் பக்கம் பார்க்க)

## தமிழர் மனித உரிமை மையம் ஐ.நாவுக்கு மனு

(நமது சிறப்பு நிருபர்)

இலங்கை அரசினால் மேற் கொள்ளப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஐ.நா.சபை கவனத்தில் எடுக்க வேண்டுமென தமிழர் மனித உரிமை மையம் கோரியுள்ளது.

இது தொடர்பாக தமிழர் மனித உரிமை மையத்தில் கடந்த 19ம் திகதி ஐ.நா.வின் 57 வது

(8ம் பக்கம் பார்க்க)

இன்று உகல நீர் தினம்

-செய்தி



நம்மட நாட்டில கண்ணீர் தினம் ஓடக்குள்ள தண்ணீர் தினம் சாத்தியப்படுமமா .........

தமிழ் பேசும் மக்களின் குரலாக ஒலிக்கிறது தினக்கதிர்

# தினக்கதிர்

த.பெ. இல: 06
07, எல்லை வீதி தெற்கு,
மட்டக்களப்பு.
தொ. பே. இல : 065 - 23055

E-mail :- tkathir@snet.lk


## ஆடு நனைகிறதென்று ஓநாய்.....

மட்டக்களப்பு நகரின் வாவியை அண்டியுள்ள மாந்தீவிலுள்ள. தொழுநோய் மருத்துவமனைக் கட்டிடத்தையும் அது அமைந்துள்ள சுமார் நூறு ஏக்கர் நிலப்பரப்பையும் இலங்கை இராணுவம் தனது உபயோகத்துக்கு எடுத்துக் கொள்ள நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

1926-ஆம் ஆண்டில் இலங்கையில் முதல் முதலாகத் தொழு நோயாளர்களுக்கெனக் கட்டப்பட்டது. இந்த மருத்துவ மனை. இம் மருத்துவமனையில் ஆரம்பத்தில் இருநூற்றைம்பது நோயாளிகள் தங்கி சிகிச்சை பெற்றனர்.

மாந்தீவு தொழுநோயாளர் மருத்துவமனையில் இனப்பாகுபாடு இன்று வரை இருந்ததில்லை. சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள், பறங்கியர் என்று சகல இனத்தவர்களும் தங்கியிருந்து சிகிச்சை பெற்றிருக்கின்றனர்.

இன்றும் கூட சிங்கள, தமிழ் முஸ்லிம் நோயாளர்கள் இம்மருத்துவமனையில் தங்கியிருந்து சிகிச்சை பெற்று வருகின்றனர். இவர்களுள் நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக இம்மருத்துவ்மனையில் தங்கி சிகிச்சை பெற்று வரும் ஒரு நோயாளியும் இருந்து வருகிறார்.

இங்குள்ள நோயாளிகளுக்கு வெளி உலகத்தைப் பற்றிய கவலையே இல்லை. அவர்களுக்கு இந்த மருத்துவமனை தான் உலகம். வெளியில் நடக்கும் இனப்பிரச்சினையோ, அரசியல் பிரச்சினையோ இவர்களை எந்தவிதத்திலும் பாதிப்பதில்லை.

இப்பொழுது இந்த மருத்துவமனையில் பதினைந்து சிங்கள தொழுநோயாளிகளும் தமிழ் முஸ்லிம் நோயாளிகளும் தங்கிச் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கடந்த இரண்டாயிரமாமாண்டு நவம்பர் மாதம் சுகாதார அமைச்சு விடுத்த சுற்று நிருப்மொன்றில் மாந்தீவு தொழுநோயாளர் மருத்துவமனை மூடப்படவிருப்பதாகவும் தொழுநோயால் பீடிக்கப்பட்டவர்கள் , மாவட்டத்திலுள்ள மருத்துவமனைகளில் வெளிநோயாளர் பிரிவுகளில் சிகிச்சை பெறலாமென்றும் அறிவித்தது.

தொழுநோய் ஒரு தொற்று நோயல்ல என்பது உண்மையே. ஆனாலும் சமூகத்தில் இந்த நோயாளிகளை மக்கள் எப்படி நடத்துவார்களென்பதும் மக்கள் அறிந்ததே.

இந்தக் காரணத்தினால் தான் பிரிட்டிஷார் அழகும் சுகாதாரத்துக்கேற்ற சுற்றாடலும் உடல் வியாதியால் பீடிக்கப்பட்டாலும் உள்ளம் அதனால் பாதிக்கப்படல் கூடாது என்பதற்காக மாந்தீவைத் தேர்ந்தெடுத்து தொழுநோயாளர்களுக்கென இந்த மருத்துவமனையை அமைத்து அவர்களுக்கு சிகிச்சையுமளித்துப் பராமரித்தும் வந்தனர்.

மட்டக்களப்பிலுள்ள படைத்தளம் மாந்தீவு தொழு நோயாளர் மருத்துவமனையிலுள்ள நோயாளிகள் அனைவரும் இம்மாதம் 28ஆந் திகதி கொழும்பில் இராகமைக்கு அருகேயுள்ள ஹெந்தளை தொழுநோயாளர் மருத்துவமனைக்கு மாற்றப்படுவார்களென்று மாந்தீவு தொழுநோயாளர் மருத்துவமனை அதிகாரிகளுக்கு அறிவித்தது.

இம்மாதம் 23ஆந் திகதி அதாவது நாளை அதிகாரிகள் குழுவொன்று மாந்தீவு மருத்துவ மனையைப் பார்வையிட வரவிருப்பதாகவும் நோயாளிகள் இத்தீவை விட்டுப் புறப்படுவதற்குத் தயாராக இருக்க வேண்டுமென்றும் சுகாதார அமைச்சும் அறிவித்திருந்தது.

இந்த மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் பதினைந்து சிங்கள நோயாளர்களின் பாதுகாப்புக்கருதியே மாந்தீவு தொழுநோயாளிகள் ஹெந்தளைக்கு மாற்றப்படவிருப்பதாக சுகாதார அமைச்சு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இத்தனை வருடங்களாக எந்தவிதப்பாதிப்பும் இல்லாமல் இங்கு சிகிச்சை பெற்று வரும் சிங்கள நோயாளர்களுக்கு இப்போது பாதுகாப்பளிப்பதற்கு சுகாதார அமைச்சு அக்கறை கொண்டிருக்கிறது.

பிந்துனுவெவ, மற்றும் சிறைச்சாலைகளில் தமிழ் கைதிகளுக்கு நேர்ந்த பரிதாப பயங்கர முடிவுகளுக்குப் பின்னரும் மாந்தீவிலுள்ள தமிழ் நோயாளர்கள் ஹெந்தளைக்கு மாற்றப்படுவது பற்றி யாரும் கவலைப்படவில்லை.

இவை மட்டுமல்ல மாந்தீவு நோயாளர்களுக்குப் போதிய மருத்துவ வசதிகளில்லையென்றும் சரியான உணவு வசதிகளில்லையென்றும் கூட கூறப்படுகிறது.

''ஆடு நனைகிறது என்று ஓநாய் அழுதகதை'' மாதிரி மாந்தீவு தொழுநோயாளர்களின் பாதுகாப்புக்கும் பராமரிப்புக்குமாக அந்த நோயாளர்கள் ஹெந்தலைக்கு மாற்றப்படவிருக்கிறார்களாம்.

உண்மையில் இராணுவத்தின் பாதுகாப்புக்கும் வசதிக்குமாக அழகான மாந்தீவு கைமாறவிருப்பதே உண்மை!

சமாதானத்துக்காக நடைபெறும் போர் சமாதானத்தைப் போலவே எட்டாத இடத்துக்குப் போய்க் கொண்டிருப்பதால் அழகான அமைதியான மாந்தீவும் ஆயுதப்படைகளின் நிரந்தரத் தளமாக நிலைபெற்றாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை!

# சொந்தங்கள் தூரவிலகிய போது தொழுநோயாளரை அரவணைத்த தீவு!

**இரா. துரைரத்தினம்**

மனைவி பிள்ளைகள், உற்றார்உறவினர்கள் சொந்தம் என்று சொல்லிக்கொண்ட அனைவருமேதொட்டுக்கொள்ள அஞ்சி தூர விலகிய போது சோகத்தை மட்டும் சுமந்து கொண்டு இத்தீவுக்குள் காலடி எடுத்து வைத்தவர்கள் தான் இங்கிருக்கும் அனேகர். இலங்கைத் தீவிற்குள் தீவாகஇருக்கும் மாந்தீவுதான் இவர்களைப் பொறுத்தவரை முழு உலகமும். சொந்தங்கள் குஸ்ரரோகிஎன்று அருவருப்போடு முகத்தை திருப்பியபோது அன்போடு அரவணைத்துக்கொண்ட இத்தீவில் ஜம்பதுஅறுபது வருடங்களுக்கு மேலாக வாழ்ந்து மரணித்து போனவர்களும் அனேகர். அந்த தீவிலிருந்து தங்களை எங்கோ கொண்டு செல்லப்போகிறார்கள் என அறிந்ததும் கலங்கிப்போய் இருக்கின்றன அந்த ஜீவன்கள். இதை யாரிடம் கூறமுடியும், யாருடன் தொடர்பு கொள்ள முடியும். தங்களை மாற்ற வேண்டாம் என அங்கிருக்கும் தாதிகளிடம், ஊழியர்களிடம் மட்டும்தான் கூறமுடியும். ஆரசியல்வாதிகளையோ, பொது நிறுவனங்களையோ தொடர்புகொள்ளக்கூடிய வல்லமையும், ஆற்றலும் சக்தியும் அவர்களுக்கு இல்லை. அரச ஊழியர்களான தங்களால் எதையும் செய்யமுடியாது அரசாங்கம் எடுக்கும் முடிவுக்கு கட்டுப்பட்டுதான் தங்களால் நடக்க முடியும் எனஊழியர்கள் கையை விரித்து விட்டனர்.


மாந்தீவு தொழு நோயாளர் வைத்தியசாலை மட்டக்களப்பு விமானப் படைத் தளத்தை அடுத்து மட்டக்களப்பு வாவியால் சூழப்பட்ட தீவில் அமைந்தி ருக்கிறது. மட்டக்களப்புநகரிலிருந்துமேற்காக 5கிலோ மீற்றருக்கு அப்பால் உள்ளது.



மாந்தீவு மருத்துவமனையில் தொழ்நோயாளர் ஒருவர்

சுமார் நூறு ஏக்கர் நிலப்பரப்பை கொண்ட இத்தீவில் மாந்தீவு வைத்தியசாலையும்,உபதபாலகம் ஒன்றும் உள்ளது. பொதுமக்களின் குடியிருப்புக்கள் எதுவும் அங்கு இல்லை. தீவின் வாவிக் கரையோரத்தை சுற்றி இயற்கை எழில் கொண்ட பெரிய மரங்களும் காணப்படுகின்றன. இத்தீவிற்கு தனியான படகுச் சேவையும் உண்டு.

1990ம் ஆண்டுக்கு முன்னர் அங்கு செல்வதற்கு எந்தக் கட்டுப்பாடுகளும் இல்லை. வவுணதீவு இராணுவ முகாம் அமைக்கப்பட்டு விமானப்படை தளமும் விஸ்தரிக்கப்பட்ட பின்னர் அங்குசெல்வதாக இருந்தால் விமானப் படையினரினதும், இராணுவத்தினரினதும் அனுமதி பெற்றே செல்லவேண்டும். இவ்வைத்தியசாலையை மூடுவதாக வெள்ளிவந்த செய்திகளையடுத்து இங்குள்ள தமிழ் முஸ்லீம் பறங்கி இன நோயாளர்கள் கலக்கமும், கவலையும் அடைந்துள்ளனர். இவ்வைத்தியசாலையில் 14சிங்களவர்களும், 8தமிழர்களும், 4முஸ்லீம்களும், ஒருபறங்கியினத்தவரும் சிகிச்சைபெற்று வருகின்றனர். இவர்களில் எட்டுப்பேர் பெண்களாவர்.



மாந்தீவு தொழுநோயாளர் வைத்தியசாலையில் ஒருவார்டுக்கு வெளியே

இவ்வைத்தியசாலையை எதிர்வரும் 28ம் திகதி மூடிவிட்டு வத்தளை ஹெந்தளையில் உள்ளதொழுநோயாளர் வைத்தியாலைக்கு நோயாளர்களை மாற்றுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது. றாகம தொழுநோய் பணிப்பாளர் அலுவலகத்திலிருந்து இதற்கான பணிப்புரை மாந்தீவுதொழுநோயாளர் வைத்தியசாலைக்கு அனுப்பபட்டுள்ளது. எதிர்வரும் வெள்ளிக்கிழமைகொழும்பிலிருந்து வரும் அதிகாரிகள் குழு இவ்வைத்தியாலையை மூடுவதற்கான ஏற்பாடுகளைசெய்யவுள்ளனர். எதிர்வரும் 28ம் திகதி வலையிறவு மாந்தீவு படகுதுறையடியில்நோயாளர்களையும், வைத்தியசாலை உபகரணங்களையும் தம்மிடம் ஒப்படைக்குமாறு மட்டக்களப்பு233வது படைப்பிரிவு அலுவலகத்திலிருந்தும் வைத்தியசாலை அதிகாரிகளுக்குஅறிவிக்கப்பட்டிருக்கிறது.

சிங்கள நோயாளர்களைத்தவிர ஏனைய 13நோயாளர்களும் தங்களை ஹெந்தளைக்கு மாற்றவேண்டாம்என கோரிக்கை விடுத்துள்ளனர்.

இலங்கையில் தற்போது இரு தொழுநோயாளர் வைத்தியசாலைகளே உள்ளன. 1926ம் ஆண்டில் பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் மாந்தீவு தொழுநோயாளர் வைத்தியசாலை கத்தோலிக்ககன்னியாஸ்திரியர்களால் ஆரம்பிக்கப்பட்டது. தொழுநோய் அபாயகரமான தொற்றுநோய் எனமக்கள் அஞ்சிய காலத்தில் வெள்ளைக்கார கன்னியாஸ்திரிகள் இவ்வைத்தியசாலையைஆரம்பித்தனர். முழுச் சமூகமுமே வெறுத்து ஒதுக்கிய போது அவர்களை அன்போடு அரவணைத்து ஆதரவு கொடுத்தவர்கள் இந்த கன்னியாஸ்திரிகள்தான். பின்னர் 1950ம் ஆண்டளவில் அரசாங்கம் பொறுப்பேற்றுக்கொண்டது. கடந்த 15வருடங்களுக்கு முதல் ஹெந்தளை தொழுநோயாளர் வைத்தியசாலை அமைக்கப்பட்டது. தொழுநோய் இருப்பதாக ஒருவருக்கு கண்டறியப்பட்டால்முதலில் மாந்தீவு தொழுநோயாளர் வைத்தியசாலையிலேயே அனுமதிக்கப்படுவர். அதன்பின்னரேதேவையேற்படின் ஹெந்தளைக்கு மாற்றப்படுவர்.

கடந்த 49 வருடங்களுக்கு மேலாக இவ்வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் கொக்கட்டிச்சோலையைச்சேர்ந்த வி.இளையதம்பி (81வயது) போன்றவர்கள் தாங்கள் ஹெந்தளைக்கு மாற்றப்பட இருப்பதை அறிந்து கவலை அடைந்துள்ளனர்.

1952ம் ஆண்டு 28வயது இளைஞனாக இருக்கும் போது இவருக்கு தொழுநோய் ஏற்பட்டது. உறவுகள்தூரவிலகிய போது இந்த தீவிற்குள் காலடி வைத்தவர்தான் அன்று தொடக்கம் 49வருடங்களாகஇந்த தீவில் உள்ள வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகிறார். சிகிச்சை என்பதை விடதனியான உலகொன்றில் வாழ்ந்து வருகிறார்கள் என்றுதான் கூறவேண்டும். இவருக்கு இந்த தீவுதான் உலகம். அவரின் காலத்தில்இவ்வைத்தியசாலைக்கு வந்த மேலும் மூவர் இப்போதும் தன்னுடன் சிகிச்சை பெற்றுவருவதாக கூறுகிறார். வெளி உலக மாற்றங்கள் எல்லாம் அவர்களைபாதித்ததில்லை.

அவர் சிகிச்சைக்கு அனுமதிக் கப்பட்ட காலத்தில் சுமார் 400பேர் இவ்வைத்தியசாலையில்சிகிச்ஸ்சை பெற்று வந்தனர். படிப்படியாக குறைந்து தற்போது 27பேரே சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

தமிழ், சிங்கள, முஸ்லீம், பறங்கியர் என அனைத்து இனத்தவர்களும் பலவருடக் கணக்காகத்தங்கியிருந்து ஒரே குடும்பமாக வாழ்ந்து வந்திருக்கிறார்கள். தைப்பொங்கல், புதுவருடம்,கிறிஸ்மஸ், வெசாக், தீபாவளி, ஹஜ் எந்த பெருநாளாக இருந்தாலும் அவர்களுக்கு கொண்டாட்டம்தான். அனைத்து கொண்டாட்டங்களுக்கும் உணவுப் பொட்டலங்கள் கிடைக் கும்,புத்தாடை கிடைக்கும், பரிசுகள் கிடைக்கும், இது ஒரு சந்தோஷம் தான் என்கிறார் அங்கிருக்கும் முதியவர் ஒருவர்.

மல்வத்தையைச்சேர்ந்த 86வயதான முத்தையா சுப்பையா என்பவரே அங்கு இருப்பவர்களில்ஆகக்குறைந்த காலம் இருப்பவராவர். 1995ம் ஆண்டு அனுமதிக்கப்பட்ட இவர் கடந்த 6வருடங்களாக சிகிச்சை பெற்றுவருகிறார்.

அண்மைக் காலத்திலேயே இவ்வைத்தியாலையை மாற்றவேண்டும். என்ற

(3ம் பக்கம் பார்க்க)

# தமிழர் தாயகத்தில் சமஷ்டி ஆட்சி அமைப்பே தமிழர் போராட்டத்துக்கு இறுதி முடிவாகும்!

## கட்சியின் தீர்மானம் பற்றி சித்தார்த்தன் அறிக்கை

கடந்த மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக நடந்து கொண்டிருக்கும் தமிழ் மக்களின் போராட்டத்திற்கு இறுதித் தீர்வாக வடக்கு-கிழக்கு இணைந்த தமிழர் தாயகத்துள் சமஸ்டி அமைப்பே சிறந்த தீர்வாக அமையுமென தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (புளொட்) தனது தேசிய மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

கடந்த 18 ஆம் திகதி தொடக்கம் 20 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை 3 தினங்கள் வவுனியாவில் கூடிய அவ்வியக்கத்தின் தேசிய மாநாட்டில் கலந்து கொள்வதற்காக நாட்டின் பல இடங்களிலும் இருந்து இயக்க முக்கியஸ்தர்கள், சிரேஸ்ட உறுப்பினர்கள் வவுனியாவுக்கு வருகை தந்திருந்தார்கள். இம் மாநாட்டில் கீழ்க்காணும் விடயங்கள் முன்வைக்கப்பட்டு விவாதத்தின் பின் தீர்மானங்களாக நிறைவேற்றப்பட்டுள்ளதாக அவ்வியக்கத்தின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

க்டந்த மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக நடந்து கொண்டிருக்கும் தமிழ் மக்களின் போராட்டத்திற்கு இறுதித் தீர்வாக வடக்கு - கிழக்கு இணைந்த தமிழர் தாயகத்துள் சமஸ்டி அமைப்பே சிறந்த தீர்வாக அமையுமென இப்பேரவை கருதுகின்றது.

வவுனியாவில் நிலவுகின்ற எரிபொருள் - வதிவிட கட்டுப்பாடுகள் குடாநாடு மட்டக்களப்புப் பிரதேசங்களில் நிலவுகிற போக்குவரத்துக் கஸ்டங்கள் இராணுவ கட்டுப்பாடற்ற பகுதிக்ளில் ஏற்பட்டிருக்கும் எரிபொருள் உணவு விவசாய உற்பத்திப் பொருட்களுக்கான தட்டுப்பாடு இவைகளை போக்குவதற்கு அரசியல் வழியிலான போராட்டங்களை தொடர்ந்தும் நடத்துவதென இம் மாநாடு தீர்மானிக்கிறது.

நோர்வே அரசின் அனுசரணையுடன் புலிகளும் அரசும் மேற்கொள்ளவிருக்கிற சமாதான பேச்சு வார்த்தைகளுக்கு எமது பூரண ஆதரவை தொடர்ந்து வழங்குவதென்று மாநாடு தீர்மானிக்கிறது.

அல்லல் பீதியுடன் வாழும் வடகிழக்கு மக்களுக்கு சமாதான வாழ்வு கிடைப்பதற்கு நாங்கள் குந்தகமாய் இருக்க மாட்டோம். பேச்சுவார்த்தையில் ஈடுபடவிருக்கும் இருசாராரும் முன் நிபந்தனைகள் விதிக்காது விட்டுக்கொடுப்புகள் மூலம் விரைவாக பேச்சு வார்த்தையை ஆரம்பித்து இணக்கப்பாட்டுக்கு வரவேண்டுமென நாங்கள் விரும்புகின்றோம். ஒரு சமூகத்தின் வளர்ச்சியைக் கல்வியும், பொருளாதாரமுமே நிர்ணயித்து வருகிறது என்பதால் தொடர்ந்தும் எமது கிராமப்புற வளர்ச்சித் திட்டங்களை மேற்கொண்டு எம் மக்களின் கல்வி பொருளாதார உயர்வுக்கு வழி கோலுவது எனவும், தொடர்ந்து அச்செயற் திட்டங்களை முன்னெடுப்பதெனவும் தீர்மானிக்கிறது. வாழ்க்கைச் செலவு உயர்வு, விலைவாசி ஏமாற்றங்கள் மக்களின் பொருளாதார உயிர் அழிவுகள் அனைத்தும் போரின் எதிர் விளைவுகள் என்பதால் போரை ஒரு முடிவுக்குக் கொண்டுவந்து எம் மக்கள் அமைதி வாழ்வை மேற்கொள்ள தொடர்நதும் எமது அரசியல் நடவடிக்கைகளை எடுப்பதென மாநாடு தீர்மானிக்கிறது.

## மிகுந்தலை சந்தி வான் விபத்தில் ரெலோ செல்வத்தின் உறவினர்களும் பலி

திருகோணமலைக்கு திருமண வைபவம் ஒன்றிற்கு சென்று திரும்பும் வழியில் கெப்பிட்டி கொல்லாவ மிகிந்தலை சந்தியில் ஏற்பட்ட வாகன விபத்தில் 6 பேர் பலியாகியுள்ளார்கள். 9 பேர் காயமடைந்துள்ளார்கள். முன்னால் சென்ற வாகனமொன்றை முந்திக் கொண்டு விரைந்த பொழுது எதிராக வந்த வாகனமொன்றுடன் மோதியே இந்த விப்த்து நிகழ்ந்துள்ளது.

வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனின் நெருங்கிய உறவினர்களென ரெலோ வட்டாரங்கள் தெரிவித்தன.

சம்பவம் இடம்பெற்ற இடத்தில் வீதியில் நின்ற வெளியார் ஒருவர் கொல் லப்பட்டதாகவும் தெரிவிக்கப்படு கிறது.

இறந்தவர்கள் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கநாதனின் நெருங்கிய உறவினர்களான வனிதா (31), லக்ஷனா (04), குசலா (28), யுகி (11),. இவர்களுடன் 17 வயதுடைய இன்னும் ஒருவரும் உயிரிழந்துள்ளதாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

மிகிந்தலையில் வைக்கப்பட்டுள்ள இறந்தவர்களின் சடலங்களை வவுனியாவுக்கும் திருகோணமலைக்கும் எடுத்துச் செல்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் ரெலோ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## செய்திச்சுருக்கம்

### தமிழக மீனவர் மீது தாக்குதல்

தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் தாக்குதல் நடத்துவதைக் கண்டித்து நேற்று செவ்வாய்க்கிழமை சென்னையிலுள்ள இலங்கைத் தூதரகம் முன் தி.மு.க.இளைஞர் அணிச் செயலாளரும் சென்னை மேயருமான மு.க.ஸ்டாலின் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. இந்த ஆர்ப்பாட்டத்தில் இளைஞர் அணியைச் சேர்ந்தவர்களும் மீனவர்களுமாக பெருந்தொகையானோர் கலந்து கொண்டனர்.

### மட்டக்களப்பு வர்த்தகர் கைது

கொழும்பு தெஹிவளையில் கடந்த 12ம் திகதி தற்கொலை அங்கி மற்றும் ஆயுதங்கள் கண்டுபிடிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக கல்கிசையிலிருந்து மட்டக்களப்புக்கு வந்திருக்கும் விசேட பொலிஸ் குழு வர்த்தகர் ஒருவரையும் கைது செய்துள்ளது. திருமலை வீதியில் கட்டிடப் பொருள் விற்பனை நிலையத்தை நடத்தி வந்த எல்லை வீதியைச் சேர்ந்த எஸ்.ஆர்.சில்வெஸ்டர் என்பவரே திங்கள் அன்று கைது செய்யப்பட்டிருக்கிறார்.

### ஒரு நாளைக்கு 2 நிறுவனங்கள் அடைப்பு

நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சி அடைந்துள்ள நிலையில் ஒரு நாளுக்கு இரண்டு நிறுவனங்கள் மூடப்படுகின்றன. இந்த நிலையில் புதிய வேலை வாய்ப்புக்கள் எப்படி உருவாகும் வரவு- செலவுத்திட்டப் பற்றாக் குறையை நிரப்ப அரசாங்கத்திற்கு வருமானம் எப்படிக் கிடைக்கும்" என ஐ.தே.க.எம்.பி அஸ்வர் சபையில் கேள்வி எழுப்பினார்.

### ரணில் புத்தளம் விஜயம்

எதிர்வரும் 7ஆம் திகதி எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க புத்தளம் மாவட்டத்திற்கு விஜயம் செய்யவுள்ளார். புத்தளம் மாவட்ட மக்களை நேரில் சந்தித்து அவர்களின் குறைபாடுகளை கேட்டறிய உள்ளார்.

# ஜோசப் பரராஜசிங்கம் கோரிக்கைக்கு கனக நமநாதனை துரிதமாக விசாரித்து விடுவிக்க பிரதியமைச்சர் சம்மதம்

(நமது நிருபர்)

மனித உரிமைகளுக்காக வாதாடும் வழக்கறிஞர் கனக நமநாதனையும் பிரபல வர்த்தகர் எஸ்.ஆர். சில்வெஸ்டரையும் கொழும்பிலிருந்து மட்டக்களப்புக்கு வந்த குற்றவியல் புலனாய்வுப் பிரிவினர் கைது செய்து கொழும்புக்குக் கொண்டு சென்றுள்ளனர். இது சம்பந்தமாக நேற்று பாராளுமன்றத்தில் ஆலோசனை சபை கூட்டத்தில்" மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் எடுத்துக் கூறினார்.

இக்கூட்டம் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சந்தானந்த டி.சில்வா பொலிஸ்மா அதிபர் லக்கி கொடித்துவக்கு இராணுவத் தளபதி, விமானப்படைத்தளபதி, மற்றும் கடற்படைத்தளபதி உட்பட பல பாதுகாப்பு அமைச்சின் முக்கிய உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டார்கள்.

இக்கூட்டத்தில் எம்.பி. ஜோசப் பரராஜசிங்கம் தொடர்ந்து பேசுகையில் கைது செய்யப்பட்ட கனநமநாதன் மனித உரிமை வழக்கறிஞர் இவரையும் வர்த்தகரையும் பொலிசார் பிடித்து வந்தது முறைகேடான செயல். நான் பொலிஸில் விசாரித்தபோது கனக நமநாதன் கைது செய்யப்பட்ட இளைஞர் ஒருவருக்கு நற்சான்றுப் பத்திரம் வழங்கியதன் காரணமாக அவரை விசாரிப்பதற்கு பிடித்து வந்ததாக தெரிவித்தனர். இருந்த போதிலும் விசாரணையை துரிதப்படுத்தி இவர்களை உடன் விடுதலை செய்ய வேண்டும் என்று அமைச்சரிடம் கேட்டுக் கொள்கிறேன்.

இதற்கு பிரதி அமைச்சர் பொலிஸ் மா அதிபரிடம் 'விசாரணை செய்து இருவரையும் விடுதலை செய்வதற்கு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். பொலிஸ்மா அதிபர் அங்கு கருத்து தெரிவிக்கையில் தெகிவளை இளைஞரை கொழும்புக்கு கூட்டிக் கொண்டு வந்து நமநாதன் விட்டதாகக் கூறினார். இதற்கு ஜோசப் எம்.பி. பதில் அளிக்கையில் கனநமநாதன் ஒரு மனித உரிமை வழக்கறிஞர் என்ற காரணத்தில் மனிதாபிமானம் என்ற ரீதியில் ஒரு தமிழ் இளைஞரை கொழும்பில் கூட்டிக் கொண்டு வந்து விட்டிருக்கலாம். ஆனால் அதில் என்ன சந்தேகம் இருக்கிறது என்று கேட்ட எம்.பி உடனடியாக இருவரையும் விடுதலை செய்ய வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார்.

இதையடுத்து பிரதி பாதுகாப்பு அமைச்சர் இவ்விசாரணையை துரிதப்படுத்தி விடுதலை செய்வதற்கு ஆவனசெய்யும் படி உத்தரவிட்டுள்ளார்.


## குறைந்த முதலீட்டில் நிறைந்த வருமானம்

*''மீன்பாடும் தேனரங்கம்'' அமைப்பின் பொருளாதார மேம்பாட்டுக் குழுவினரின் முன்முயற்சியினால் கிழக்கிலங்கை மனிதவள மேம்பாட்டு நிலையத்தின் (EHED) அனுசரணையுடன் ''ஸ்கிரீன் பிரின்டிங்'' பயிற்சிநெறி.*

**இவ்வச்சுக்கலையில் நல்ல தேர்ச்சிபெற்ற இந்திய நிபுணர் திரு.ஆர்.பரதன் அவர்கள் (அர்ச்சனா பிரின்டிங் அகடமி சென்னை/திருவனந்தபுரம்) ஏப்ரல் மாதம் 3ம், 4ம், 5ம் திகதிகளில் பயிற்சிபெற விரும்புவோருக்கு மட்டுநகரில் நேரில் செய்முறைப் பயிற்சியளிக்கவிருக்கிறார். பயிற்சிபெற விரும்புவோர் நேரிலோ அல்லது தொலைபேசியிலோ தொடர்பு கொள்ளவும்.**

**''மீன்பாடும் தேனரங்கம்''**
**21, எல்லை வீதி வடக்கு,**
**மட்டக்களப்பு - 30000.**
**தொலைபேசி : 065-25175**
**(காலை 8.30 முதல் மதியம் 12.00 வரை)** Advt.


## சொந்தங்கள்........................

*(2ம் பக்க தொடர்ச்சி)*

பூசல்கள் எழுந்தன. இங்கு சிகிச்சை பெற்றுவரும் மாத்தறையைச்சேர்ந்த 40வயதுடைய டட்லி வியாங்கொட என்பவரே மாற்றவேண்டும் என்று அடிக்கடி அமைச்சர்களுக்கும் அரசியல் வாதிகளுக்கும் கடிதங்களை எழுதி வந்திருக்கிறார். 1980ம் ஆண்டுகளுக்கு முன்னர் அனுமதிக்கப்பட்ட சிங்கள நோயாளர்கள்பலர் தமிழர்களுடன் அன்னியோன்னியமாகவே பழகிவந்திருக்கின்றனர். அவர்கள் தங்கள் இறக்கும் வரை இங்கே யே இருக்கப்போவதாக கூறி வந்தனர். ஆனால் இளம்வயதுடைய டட்லிவியாங்கொட போன்றவர்களால்தான் பிரச்சினையே கிளப்பப்பட்டிருப்பதாக அங்குள்ள ஊழியர் ஒருவர் தெரிவித்தார். முக்கியமாக 1995ம் ஆண்டிற்குப்பின்னரே சிங்கள நோயாளர்கள் தங்களை ஹெந்தளைக்கு மாற்ற வேண்டும் என்று கோரிக்கை விடுக்க ஆரம்பித்தனர். சிங்கள நோயாளர்கள் தாங்கள் இங்கு இருக்க விரும்பவில்லை என்பது போல தமிழ், முஸ்லீம் நோயாளர்கள் ஹெந்தளைக்கு மாற்றப்படுவதை விரும்பவில்லை. பிந்துனுவ போன்ற இடங்களில் நடைபெற்ற சம்பவங்கள் போன்று ஹெந்தளையிலும் நடை பெறலாம் என தமிழ்,முஸ்லீம் நோயாளர்கள் அஞ்சுகின்றனர். சிங்கள நோயாளர்களின் கோரிக்கைக்கு கவனம் செலுத்திய அரசாங்கம் தமது வேண்டுகோளை உதாசீனம் செய்து விட்டதாக அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர். இங்கு வைத்தியர் ஒருவர், தாதிகள் நான்குபேர், மருந்தாளர், எழுது விளைஞர் கள், தையல்தொழிலாளி, சிற்றூழியர்கள், உட்பட 33பேர் கடமையாற்றுகின்றனர். இங்கு கடமையாற்றுபவர்களுக்கு நோர்வே அரசாங்கத்தின் நோராட் உதவித்திட்டத்தின் கீழ் மாந்தீவில் பெருந்தொகையான பணச்செலவில் விடுதிகள் கட்டிக் கொடுக்கப்பட்டன. 1996ம் ஆண்டு மாந்தீவு படகுதுறையடியில் கண்ணிவெடி வெடித்ததையடுத்து ஊழியர்கள் எவரும் கடமைநேரத்தைதவிர ஏனைய நேரங்களில் அங்கு இருக்க கூடாது என்றும் விடுதி களில் யாரும் தங்கியிருக் ககூடாது என்றும் படையினர் உத்தரவிட்டனர். இதனால் ஊழியர்கள் அனைவரும் போக்குவரத்துசிரமங்களின் மத்தியிலேயே கடமைக்கு வரு கின்றனர். இவ்வைத்தியசாலை மூடப்பட்டால் அமைய அடிப்படையில் கடமையாற்றும் சில ஊழியர்களும் வேலை இழக்க வேண்டி ஏற்படும் என வைத்தியசாலை ஊழியர் ஒருவர் தெரிவித்தார். இவ்வைத்தியசாலை மூடப்பட்டால் மீண்டும் அத்தீவிற்குள் மக்கள் காலடி எடுத்து வைக்க முடியாது. தமிழ் மக்களின் கைகளை விட்டு அத்தீவு பறிபோய் விடும். இதை உணர்ந்து தமிழ்அரசியல் தலைவர்கள் தீர்க்க தரிசனத்துடன் செயற்பட வேண்டும்.

# ராஜினாமா செய்யும் பேச்சுக்கே இடமில்லை; வாஜ்பாய் திட்டவட்டமாக அறிவிப்பு

(புதுடில்லி)

ஆயுத பேர விவகாரம் தொடர்பாக அரசு ராஜினாமா செய்யும் பேச்சுக்கே இடமில்லை என்று பிரதமர் வாஜ்பாய் திட்ட வட்டமாக அறிவித்து உள்ளார்.

பாரதிய ஜனதா பாராளு மன்ற கட்சிக்கூட்டம் டெல்லியில் நேற்று நடந்தது, பிரதமர் வாஜ்பாய் அதில் பேசியதாவது:- ஆயுதபேர ஒப்பந்தங்களில் மத்திய அரசு எந்த தவறும் செய்யவில்லை. அப்படியே ஒழுங்கீனம் எதுவும் நடந்திருந் தால் அதற்கு உரியவர்கள் தக்க தண்டனையை அனுபவிப்பார்கள். பதவி மற்றும் அந்தஸ்து காரணமாக யாரும் தப்ப முடியாது. மத்திய அரசு பதவிவிலகவேண்டும் என்று எதிர்க்கட்சிகள் கூறுவதை ஏற்க முடியாது. மத்திய அரசுக்கு பாராளுமன் றத்தில் முழு மெஜாரிட்டி இருக்கிறது. ஆயுதபேர பிரச்சினை குறித்து விவாதம் நடத்தவும் மத்திய அரசு தயாராக உள்ளது. இந்த நிலையில் எதிர்க்கட்சியினர் விவாதம் நடத்த முன்வராமல் பின்வாங் குகின்றனர். பாராளுமன்றத்தை நடத்த விடாமல் கடந்த 5 நாட்களாக எதிர்க்கட்சிகள் ரகளை செய்து வருகிறர்கள். தேசிய ஜனநாயக கூட்டணியில் பிளவை ஏற்படுத்த முடியவில்லை என்ப தால் இப்படி ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள். பாராளுமன்றத்தில் ரகளை செய்து அதன் மூலம் எங்கள் அரசை கவிழ்த்து ஆட்சியை பிடிக்க எதிர்க்கட்சிகள் முயல்கிறார்கள். உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாடு இந்தியா. இங்கே பாராளுமன்றத்தில் ரகளை செய்வதன் மூலம் உலகுக்கு எந்த செய்தியை எதிர்க்கட்சிகள் சொல்ல விரும்புகின்றன? எங்கள் மீது ஊழல் குற்றம்சாட்டி ஆட்சியை பிடிக்க எதிர்க்கட்சிகள் முயல்கிறார்கள். அவர்களது முயற்சி வெற்றி தராது. ஊழலை ஒழிக்க எங்கள் அரசு உறுதியாக பாடுபடும். தேசபக்தி குறித்து எங்களுக்கு யாரும் நற்சான்றிதழ் தரத்தேவையில்லை. ஆயுதபேர விவகாரம் தொடர்பாக அரசு ராஜினாமா செய்யும் பேச்சுக்கே இடமில்லை. இவ்வாறு வாஜ்பாய் கட்சிக் கூட்டத்தில் பேசியுள்ளார். அதே கூட்டத்தில் பேசிய மத்திய உள்துறை மந்திரி அத்வானி எதிர்க் கட்சிகள் பாராளுமன்றத்தை நடத்த விடாமல் ஆர்ப்பாட்டம் செய்வதை கடுமையாக கண்டித்தார். ஜனநாயக ரீதியாக .விவாதம் நடத்த முன்வர வேண்டும். அதை விட்டுவிட்டு இப்படி ரகளை செய்வது ஜனநா யகத்துக்கு நல்லதல்ல என்று அவர் கூறினார். இந்த கூட்டத்துக்கு பின் பாராளுமன்ற பா.ஜ. கட்சி செய்தித் தொடர்பாளர் அஸ்வினி குமார் கூறியதாவது:- ஆயுதபேர ஊழல் தொடர்பாக தேசிய ஜன நாயக கூட்டணியினர் பல் வேறு பேரணி களை நடத்த உள்ளனர். முதல் பேரணி டெல்லியில் வரும் 25ந்தேதி நடைபெற உள்ளது. பிரதமர் வாஜ்பாய் மற்றும் தேசிய ஜனநாயக கூட்டணியின் மூத்த தலைவர்கள் அதில் உரையாற்றுவார்கள். இவ்வாறு அவர் கூறினார்.


## திருவில்லிபுத்தூர் தொகுதியை கம்யூனிஸ்டு கட்சிக்கு தாரைவார்க்க ஜெயலலிதா முடிவு

(சென்னை)

தொடர்ந்து அ.தி.மு.க.வே 6 முறை போட்டியிட்டு வந்த திருவில்லிபுத்தூர் தொகுதியை இந்த முறை கம்யூனிஸ்டு கட்சிக்கு தாரை வார்க்க ஜெயலலிதா முடிவு செய்திருக்கிறார். இந்த தொகுதியின் அதி.மு.க. எம்.எல்.ஏ. தாமரைக்கனியை அழைத்து இந்த முடிவை ஜெயலலிதாவே தெரிவித்திருக்கிறார். தாமரைக்கனியை பழிவாங்கு வதற்காகவே ஜெயலலிதா இந்த முடிவைஎடுத்திருக்கிறார் என்று அவரது ஆதரவாளர்கள் கொதிப்படைந்திருக்கிறார்கள். தேர்தலில் தாமரைக்கனி சுயேச சையாக போட்டியிட்டு ஜெயலலி தாவுக்கு பாடம்புகட்ட வேண்டும் என்றும் அவரிடம் அவர்கள் வற்புறுத்தி வருகிறார்கள். தொகுதி மக்களுக்கு தொடர்ந்து சேவை செய்யவும் தமதுஆதர வாளர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கும் வகையிலும் தேர்தலில் போட்டி போடப்போவதாக தாமரைக்கனி கூறினார். 1991-ம் ஆண்டு சட்டசபை தேர்தலில் போட்டி யிட்டதைப் போல சுயேச்சையாக போட்டி யிடுவதா? அல்லது அதி. மு.க. கூட்டணியை எதிர்க்கும் அணியில் உள்ள ஏதாவது ஒரு கட்சியில் சேர்ந்து போட்டி யிடுவதா? என்பது பற்றி ஆலோ சித்துக் கொண்டிருப் பதாகவும் தாமரைக்கனி கூறினார். சுயேச் ச்சையாக போட்டியிட்டு வெற்றி பெற முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. ஒருமுறை தேர்தலில் இதனை நிரூபித்தும் இருக்கிறேன். ஆனா லும் தொகுதி மக்களுக்கு சிறந்த முறையில் சேவை செய்வதற்கு சுயேச்சை எம்.எல். ஏ.வாக இருப்பதை விட அரசியல் கட்சி ஒன் றின் எம்.எல்.ஏ.வாக இருப்பது பல வழிகளில் அனு கூலம் என்ப தால் இதுபற்றி சிந்தித துக் கொண்டு இருப்பதாகவும் தாமரைக்கனி தெரிவித்தார். இரண்டொரு அரசியல் கட்சிக ளிடமிருந்து தூது வந்திருப்பதாகவும், தாமரைக்கனி தெரிவித்தார். அதுபற்றி அவர் விவரிக்க மறுத்து விட்டார். ஜெயலலிதாவின் அழைப்பின் பேரில் திங்கட்கிழமை அவரை தாமரைக்கனி சந்தித்தார். அவருடன் அவரது மகனும் நகர் மன்ற உறுப்பினருமான இன்பதமிழனும் சென்றிருந்தார். அப்போது இந்த தேர்தலில் தாமரைக்கனிக்கு கட்சி டிக்கெட் கொடுக்க முடியாது என்ற முடிவை ஜெயலலிதா தெரிவித் திருக்கிறார். அத்துடன் இந்த முறை திருவில்லிபுத்தூர் தொகுதியை தோழமைக்கட்சிகளில் ஒன்றான இந்திய கம்யூனிஸ்டு கட்சிக்கு ஒதுக்கப்போவதாகவும் ஜெயலலிதா தெரிவித் திருக்கிறார். அவரது இந்த முடிவுக்கு அப்போதே தாமரைக்கனி எதிர்ப்பு தெரிவித்திருக்கிறார்.

விருதுநகர் மாவட்டத்திலுள்ள திருவில்லிபுத்தூர் தொகுதி தொடர்ந்து அதி.மு.க.வே போட்டியிட்டு வரும் தொகுதியாகும். 1977 முதல் 1996 வரை நடந்த 6 தேர்தல்களிலும் அ.தி.மு.க. இங்கு போட்டியிட் டிருக்கிறது. இந்த 6 தேர்தல்களிலும் தாமரைக்கனி பேரட்டியிட்டு 5 முறை வெற்றி பெற்றிருக்கிறார். இதில் ஒரு முறை அவர் சுயேச்சையாகப் போட்டி யிட்டு வென்றவர் என்பது குறிப்பி டத்தக்கது. 1989 தேர்தலில் அ.தி. மு.க. ஜானகி அணி வேட்பாளராக போட்டியிட்டபோது மட்டும் தோல்வி அடைந்தவர்.



அப்கானிஸ்தானில் பாறையில் செதுக்கப்பட்ட புத்தர் சிலை பயங்கர வெடிமருந்துகள் மூலம் துண்டு துண்டாக சிதறடிக்கப்படுவதையும், புத்தர் சிலை இருந்ததற்கான அடையாளமே தெரியாத அளவிற்கு சிலை உருத்தெரியாமல் போனதையும் படங்களில் காணலாம். தலிபான் தீவிரவாதிகள் உத்தரவுப்படி இந்த வேலைகள் நடக்கின்றன.

## பாடைகட்டி குரங்குக்கு இறுதி மரியாதை

(திருத்தணி)

திருத்தணி அடுத்த திருவால ங்காடு ஒன்றியத்தில் குன்னத் தூர் கிராமம் உள்ளது. இங்கு ஒரு குரங்கு தன்னந்தனியாக வாழ்ந்து வந்தது. சம்பவத்தன்று தெருநாய்கள் கையில் சிக் கியதால் குரங்கு் பரிதாபமாக மரணமடைந்தது. குரங்கின் இந்த அகால மரணம் கிராமத்தையே சோகத்தில் ஆழ்த் தியது. ஏதோ தங்கள் குடும்ப உறுப் பினர் ஒருவர் இறந்து விட்டதை போல கிராம மக்கள் கருதி குரங்கின் இறுதிச்சடங்குக்கு ஏற்பாடு செய்தனர். ஊர்ப்பெரியவர்களின் ஆலோசனைப்படி ஊரே ஒன்று திரண்டு பச்சை முங்கிலில் பாடை கட்டி குரங்கை எடுத்துச் சென்றது. இறுதி ஊர்வலத்தில் ஏராளமான பெண்களும் ஆண்களும் கலந்து கொண்டனர். ஊர்க்கோடியில் குரங்கு புதைக்கப்பட்டது. மறுநாள் பால் ஊற்றும் சடங்குகள் முறை யாக நடந்தன. அத்துடன் குரங்கை புதைத்த இடத்தில் கிராம மக்கள் தினமும் விளக்கேற்றி வருகிறார்கள். 16-ம் நாள் விசேசம் நடத்த வும் திட்டமிடப்பட்டுள்ளது. வாழ்நாள் முழுவதும் குரங்காக இருந்த ஒரு பிராணிக்கு இறந்த பிறகு இப்படி மனிதர்களுக்கு உரிய மரியாதை கிடைத்துள்ளது. அதிர்ஷ்டக்கார குரங்குதான்.

## கோபுரத்தில் கோட்டான் குஞ்சுகள்

விருத்தாசலத்தில் உள்ள பழமலைநாதர் கோவிலில் மகா கும்பாபிஷேகத்தை ஒட்டி திருப்பணி வேலைகள் மும்முர்மாக நடை பெற்று வருகின்றன். அதில் நடு கோபுர திருப்பணிகளை தரும்புர ஆதீனத்தினர் செய்து வருகிறார்கள். இந்த கோபுரத்தில் ஆஸ்திரேலியா நாட்டைச் சேர்ந்த கோட்டான் வகை பறவை ஒன்று கடந்த 6 மாத காலமாக வாழ்ந்து வருகிறது. அது ஒரு மாதத்துக்கு முன்னர் 10 முட்டைகளை இட்டது. அவற்றில் 5 முட்டைகள் தற்போது குஞ்சு பொரித்து உள்ளன. அந்த குஞ்சுகள் சுமார் 2 சாண் உயரம் உள்ளன. அவற்றின் தலை குரங்கு போலவும் உடல் கழுகு போலவும் கால்கள் கோழி போலவும் சிறகுகள் பல வர்ண்ணங்களிலும் உள்ளன. குரல் பாம்பு சீறுவது போல உள்ளது. அவற்றை ஒவ்வொரு நாளும் ஆயிரக்கணக்கான மக்கள் வந்து வியப்புடன் பார்த்துவிட்டுச் செல்கிறார்கள். இந்தத் தகவலை விருத்தாசலத்தைச் சேர்ந்த தங்க கார்த்திகை ராஜா என்பவர் தெரிவித்து உள்ளார்.

## பிரதமரின் படம் தீக்கு இரை

(லட்சுமணாத்தி)

உள்ளூர் மசூதி ஒன்றை சேதப்படுத்த முயுன்ற கும்பலை கலைப்பதற்காகப் பொலிசார் ஆகாயத்தை நோக்கிப் பல முறை சுட்டனர். இதன் பின்னர் முறை கேடான சம்பவங்களின் போது 15 கடைகள் தீக்கிரையாக்கப்பட்டன.


இந்தியாவின் தொழித் துறை நகரில் நடந்த இவ் வன்முறைகளால் பிரதமர் வாஜ்பாயின் உருவப்படம் எரிக்கப்பட்டது.

இந்து தீவிரவாதக் குழு ஒன்றினால் திருக்குர் ஆனின் பிரதி ஒன்று எரிக்கப்பட்டதைத் தொடர்ந்தே மாணவ இஸ்லாமிய இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் பிரதமரின் படத்தை எரித்து நாசப்படுத்தினார்கள்.

## ஜனாதிபதியுடன் பெர்னாண்டஸ் சந்திப்பு; ஆயுத புகாருக்கு விளக்கம்

(புதுடில்லி)

ஜனாதிபதி கே.ஆர். நாராயணனை பதவி விலகிய ராணுவ மந்திரி ஜார்ஜ் பெர்னா ண்டஸ் சந்தித்தார். ஆயுத பேர ஊழல் புகார் பற்றி அவர் ஜனாதிபதியிடம் விளக்கம் அளித்ததாக தெரிகிறது..டேஹல்கா டாட் காம் இண்டர்நெட் வெளிப்ப டுத்திய போலி ஆயுத பேரம் தொடர்பாக ராணுவ மந்திரி ஜார்ஜ் பெர்னாண்டஸ் கடந்த 15-ந் தேதி ராஜினாமா செய்தார் அல்லவா? அவர் ராஜினாமா செய்வதற்கு சில மணி நேரத்துக்கு முன் ஜனாதிபதி கே.ஆர். நாராயணனை பிரதமர் வாஜ்பாய் சந்தித்து நிலை மையை விளக்கினார். இந்த நிலையில் பதவி விலகியபெர்னாண்டஸ் நேற்று மாலைஜனாதிபதி மாளிகைக்கு சென்று ஜனாதிபதி நாராய ணனை சந்தித்து 30 நிமிடம் பேசினார். அப்போது ஆயுத பேர ஊழல் புகார் பற்றிய நிலவரத்தை எடுத்துக் கூறியதாக தெரிகிறது. ஜனாதிபதி முப்படைகளின் தளபதி என்பது குறிப்பிடத்தக்கது. எனவே ராணுவ ஆயுத பேரம் பற்றிய விளக்கத்தை ஜனாதி பதி கேட்டு இருக்கலாம் என்று தெரிகிறது. ராணுவ மந்திரி பதவியில் இருந்து பெர்னாண்டஸ் விலகிய போதிலும், தேசிய ஜன நாயக கூட்டணி ஒருங்கி ணைப்புக் குழு அமைப் பாளராக நீடித்து வருகிறார் என்பதும் குறிப்பி




ஒரு கங்காரு மிருகம் பயந்து ஓடுவது போலவும் அதனை ஒரு புலி விரட்டுவது போலவும் அமைந்த இச் சித்திரம், உலகின் நம்பர் 1 கிரிக்கற் அணியான அவுஸ்திரேலிய கிரிக்கற் அணி இந்திய வீரர்களிடம் திணறி வருவதைக் குறிப் பிடும் வகையில் சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் வைக்கப்பட்டிருந்த கார்ட்டூன் சித்திரத்தையே இங்குள்ள படத்தில் காண்கின்றீர்கள்.

# கல்முனை நகரத்தை அழகுபடுத்தவும் வரி அறவிடவும் தீவிர நடவடிக்கை

(மருதமுனை ஹரீஷா)

நமது நகரத்தை நாமே அழகுபடுத்திப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். அத்துடன் தொற்று நோய்களிலிருந்தும் நுளம்புத் தொல்லைகளிலிருந்தும் நம்மை நாமே பாகாத்துக் கொள்ள வேண்டும். எனவே வீடுகளிலும், வியாபார நிலையங்களிலும் சேரும் குப்பைகளைப் பசளைப் பைகளில் சேகரித்து வைத்து தங்களின் வீதிகளுக்கு உழவு இயந்திரங்கள் வரும் போது அதை அவர்களிடம் கொடுத்து மீளவும் தங்களது பசளைப் பைகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

இவ்வாறு கல்முனை நகர சபையின் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரும், பிரதேச செயலாளருமான ஏ.எல்.எம்.பழீல் கல்முனை நகர சபை வரி இறுப்பாளர்களுக்கு துண்டுப் பிரசுரத்தின் மூலம் அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.

அந்தத் துண்டுப் பிரசுரத்தில் மேலும் அறிவுறுத்தியுள்ளதாவது:-

பாதைகளில் எவருடைய வீட்டுக்கு முன் குப்பைகள் கொட்டப்பட்டுள்ளதோ விசாரணையின் பின்னர் அவர்களுக்கு எதிராக சூழல் சுற்றாடல் பாதுகாப்பு சட்டத்துக்கு அமைவாக நீதிமன்றம் மூலம் நடவடிக்கை எடுத்து அவரிடமிருந்து குற்றப்பணம் அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

அதே போன்று ஏராளமான மதிப்பீட்டு வரி நிலுவைகள் தங்களில் பலரிடமிருந்து கல்முனை நகர சபைக்கு வருமதியாகவுள்ளது. இவ் வரிகளை உடனடியாக அறவீடு செய்யுமாறு அரசினால் எமக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. எமது நகர சபை தங்களிடமிருந்து இவ்வரியை அறவீடு செய்து தங்களினால் தெருக்களில் போடப்படும் குப்பைகளை அகற்றுவதற்காகவும். தாங்கள் பிரயாணம் செய்யும் தெருக்களைத் திருத்தம் செய்வதற்கும், பயன்படுகிறது. முக்கியமாக உழவு இயந்திரங்களையும் பயன்படுத்துவதன் காரணமாகவும் வருடாந்தம் இலட்சக்கணக்கான ரூபாய்களைச் செலவிட்டு வருகிறது.

எனினும் தங்களில் பலர் இன்று வரை தங்களின் வரி நிலுவைகளைச் செலுத்தவில்லை. எனவே நாம் உடனடியாக அவ்வாறானவர்களின் சொத்துக்களைக் கைப்பற்றி உரிய நிலுவைகளை அறவீடு செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

ஆகவே எதிர்வரும் 2001-03-30 ம் திகதிக்கு முன்னர் தாங்கள் நேரடியாக நகர சபைக்குச் சமூகமளித்து உரிய நிலுவைகளைக் கேட்டறிந்து பணத்தைச் செலுத்தி பற்றுச் சீட்டைப் பெற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

தங்களின் நிலுவைகளுக்குப் பதிலாக தங்களது சொத்துக்களைப் பறிமுதல் செய்வதற்கான நடுக்கட்டல் ஆவணங்கள் தயாரிக்கப்பட்ட பின்னர் தங்களிடமிருந்து நிலுவைக்குரிய பணத்தை ஏற்றுக் கொள்ள முடியாத நிலமை ஏற்படலாம் என்பதையும் அறியத்தருகிறோம். எனவும்,

அனுமதியற்ற கட்டடங்களை உடைத்தல் மற்றும் சட்ட பூர்வ உரிமையாளர்களின் பெயர்கள் பதியப்படாது போதல் தொடர்பான அறிவுறுத்தல்களும் அந்தத்துண்டுப் பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# சர்வதேச நீர் தினம் – 2001
## கட்டுரை, கவிதை, சித்திரப்போட்டி முடிவுகள்

கிழக்கு மாகாண பாடசாலைகளிடையே சர்வதேச நீர் தினத்தையொட்டி தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையுடன் இணைந்து காத்தான் குடி தாமரை கலை இலக்கிய வட்டம் நடாத்திய கட்டுரை, கவிதை, சித்திரப்போட்டிகளின் முடிவுகள் வருமாறு:-

கட்டுரைப்போட்டி (சிரேஷ்ட பிரிவு)

முதலாமிடம்:- ரா.யுகதாஸ் (வாழைச்சேனை)
இரண்டாமிடம்:- நா.சிவதர்சன் (குருக்கள் மடம்)
மூன்றாமிடம்:- கே.எம்.சமீனா பர்வின்(ஓட்டமாவடி)

ஆறுதல் பரிசுகள்:–

நான்காமிடம்:- மு.ச.மு.உஸைர் (காத்தான்குடி)
ஐந்தாமிடம்:- இ.தபேஸ்வரி (கன்னங்குடா)

கட்டுரைப்போட்டி (கனிஷ்ட பிரிவு)

முதலாமிடம்:- அப்துல் ரஷீர் முஹம்மது முவவ்பக் (அக்கரைப்பற்று)
இரண்டாமிடம்:- கே.எம்.ஆமுல் ஹசன் (மட்டக்களப்பு)
மூன்றாமிடம்:- தம்பிலெவ்வை உமைஸா (சம்மாந்துறை)

ஆறுதல் பரிசுகள்:–

நான்காமிடம்:- செல்வி.அ.வானதி (கிரான்குளம்)
ஐந்தாமிடம்:- ஏ.ஜே.எம்.மின்ஹாஜ் (காத்தான்குடி)

கவிதைப்போட்டி (சிரேஷ்டபிரிவு)

முதலாமிடம்:- சிவகணேசன் சிவகலா (காரைதீவு)
இரண்டாமிடம்:- ஐ.முஹம்மது நிகாஸ் (ஏறாவூர்)
மூன்றாமிடம்:- சி.பானுப்பிரியா (கதிரவெளி)

ஆறுதல்பரிசுகள்:–

நான்காமிடம்:- ந.மயூரன் குருஸ் (மட்டக்களப்பு)
ஐந்தாமிடம்:- செல்வி.சி.கிருஷாந்தினி

கவிதைப்போட்டி (கனிஷ்ட பிரிவு)

முதலாமிடம்:- அ.எழில்நிலா (களுதாவளை)
இரண்டாமிடம்:- பௌ.ஸைனப் (சம்மாந்துறை)
மூன்றாமிடம்:- ஏ.எல்.எம்.அல் பைஸல் (ஏறாவூர்)

ஆறுதல்பரிசுகள்:–

நான்காமிடம்- அழகுராசா சுதர்ஷினி (மட்டக்களப்பு)
ஐந்தாமிடம்:- சிவதர்ஷினி (அக்கரைப்பற்று)

சித்திரைப்போட்டி (சிரேஷ்ட பிரிவுக்கு மாத்திரம்)

முதலாமிடம்:- செல்வி.எம்.ஏ.சி.பாத்திமா சுமையா (காத்தான்குடி)
இரண்டாமிடம்:- சுசிமன் நிர்மலவாசன் (மட்டக்களப்பு)
மூன்றாமிடம்:- முஹம்மது தௌபீக் முஹமட் வஷாயிர் (கின்னியா)

ஆறுதல்பரிசுகள்:–

நான்காமிடம்:- செல்வி.கு.மோகனகுமாரி (மண்டூர்)
ஐந்தாமிடம்:- அருளானந்தம் அருள்பிரியா (செங்கலடி)

முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களை பெற்றவர்களுக்கு முறையே மூவாயிரம், இரண்டாயிரம், ஆயிரம் ரூபாய் பணப்பரிசில்களுடன் சான்றிதழ்களும் ஆறுதல் பரிசில்களை பெற்றோருக்கு தலா 250ரூபா பணப்பரிசில்களுடன் சான்றிதழ்களும் முன்னாள் பிரதியமைச்சரும், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை தலைவருமான அல்ஹாஜ் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாவினால் 25ம் திகதி காத்தான்குடி ஹிஸ்புல்லாஹ் இஸ்லாமிய கலாசார மண்டபத்தில் நடைபெறும் சர்வதேச நீர் தின விழாவின் போது வழங்கப்படும் என்று தாமரை கலை இலக்கிய வட்டத்தலைவர் ரி.எல்.ஜவ்பர் கான் அறிவிக்கிறார்.

# 63 இல் 47பேர் சித்தி

(கல்லாறு நிருபர்)

பெரியகல்லாறு மத்திய கல்லூரி, மாணவர்களில் க.பொ.த(சா.த) பரீட்சைக்குத் தோற்றிய 63 மாணவர்களில் 47 பேர் க.பொ.த உயர்தரம் பயில்வதற்கான தகுதியைப் பெற்றுள்ளனர். பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் கிறிஸ்தவம்(றோ.க), நடனம், விவசாயம், நிர்மாண தொழில் நுட்பம் ஆகிய பாடங்களில் 100% மானோர் சித்தியடைந்துள்ளனர். ஏனைய பாடங்களில் 60%-90% வரை சித்தியடைந்துள்ளனர். ஆங்கிலத்தில் சித்தியடைந்தோர் தொகை குறைவாகவே காணப்படுகின்றது. ஆக கூடிய சித்தியாக 7டியும், 3சியும் காணப்படுகின்றது. 7டி மேலும் இருவர் பெற்றுள்ளனர்.

# பனையோலைப் பொருட்கள் தயாரிக்கும் பயிற்சி

(மருதமுனை நிருபர் நழீம்.எம்.பதூர்தீன்)

யுவதிகளின் எதிர்கால நலன்களைக் கருத்திற் கொண்டு தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்ளும் முன்னோடி நடவடிக்கையாக பெரிய நீலாவணை அக்பர் இளைஞர் கழகமும், பனை அபிவிருத்தி சபையும் இணைந்து பனையோலையைக் கொண்டு கைப்பணிப்பொருட்கள், வீட்டுப் பாவனைப் பொருட்கள், அலங்காரப் பொருட்கள் என்பவற்றை தயாரிக்கும் பயிற்சி நெறியொன்றினை அக்பர் இளைஞர் கழகம் தற்போது ஆரம்பித்துள்ளது. ஏதாவது ஓர் இளைஞர் கழகத்தல் அங்கம் வகிக்கும் யுவதிகள் இப்பயிற்சி நெறியில் இணைந்து கொள்ளலாம். மேலதிக விபரங்களை அக்பர் இளைஞர்கழக செயலாளரிடம் அல்லது மருதமுனை, பெரியநீலாவணைப் பிரதேச இளைஞர் கழக செயலாளரிடம் பெற்றுக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்படுகிறது.

# புத்தடி நாகதம்பிரான் ஆலய சடங்கு

(களுவாஞ்சிகுடி நிருபர்)

களுவாஞ்சிகுடி கடற்கரை வீதி புத்தடி நாகதம்பிரான் ஆலய வருடாந்தச் சடங்கு கடந்த 18ம் திகதி வெகு சிறப்பாக நடைபெற்றது. 1978ஆம் ஆண்டு நாகதம்பிரான் அருள் கண்டு 84 ரூபாயுடன் ஆரம்பிக்கப்பட்ட இந்த ஆலயம் இவ்வருடம் இச்சடங்கை வெகுவிமரிசையாகக் கொண்டாடுவதாக, பொருளாளர் பொ.சிறிதரன் தெரிவித்தார். பிரபல முறிவு வைத்தியர் பேரின்பராசா தலைமையில், சின்னராசா, அருள்ராஜா, சுந்தரலிங்கம் மற்றும் பலருடன் அன்று ஆரம்பிக்கப்பட்ட இந்த ஆலயத்துக்கு இன்று வரை கிணறு வசதி இல்லாமை ஒரு குறைபாடே எனக்குறிப்பிட்ட ஆலய பரிபாலன சபை உறுப்பினர்கள், கிணறு ஒன்றை நிர்மாணிக்க சடங்கு நாள் அன்று பக்தர்கள் கொடை வள்ளல்கள் பலரிடம் இருந்து நன்கொடை பெற்றுக் கொண்டனர்.

# மருதமுனை பெஸ்ட் இளைஞர் கழகத்தில் முதலுதவி அணி ஆரம்பம்

(மருதமுனை நிருபர் நழீம் எம் பதூர்தீன்)

தற்போதைய புதுமையான உலகிற்கு முகம் கொடுக்கும் இன்றைய இளைஞர் யுவதிகள் தமது வாழ்வின் முன்னேற்றத்திற்கு பல்வேறு பயிற்சிகளைப் பெற்றுள்ள அதே வேளை முதலுதவிப் பயிற்சியினைப் பெற்றுக் கொள்வது கட்டாயத் தேவையாகும். எதிர்காலத்தில் முன்பள்ளி ஆசிரியர்களாக, அலுவலர்களாக கடமையாற்றப்போகும் இவர்களுக்குப் பெரிதும் பயன்படும் என்ற நன்நோக்கில் இம் முதலுதவி அணி ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கழகத்தின் அமைப்பாளர் தெரிவித்துள்ளார்.

இதற்கான பயிற்சி வகுப்புக்களை அம்பாறை மாவட்ட உதவி ஆணையாளரான(முதலுதவி) ஐ.எல். ஜெலீல் நடாத்தி வருகிறார்.

# தேர்தல் கால கொலையில் சந்தேக நபர்கள் ஐவர் பிணையில்!

(நமது நிருபர்)

கொலை வழக்கொன்றில் சம்பந்தப்பட்டதாக சந்தேகிக்கப்பட்ட ஒரு பிரதேச சபை அங்கத்தவர் உட்பட நான்கு பொலிசார் ஒவ்வொருவரும் 10,000 ரூபா பிணையில் செல்ல கண்டி உயர் நீதிமன்ற நீதிபதி அனுமதியளித்துள்ளார்.

கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் இடம் பெற்ற பொதுத் தேர்தலின் போது தேர்தல் வாக்குச் சாவடியருகே சமின்ட டயஸ் என்பவரின் கொலை தொடர்பிலேயே இவர்கள் கடந்த வருடம் பெப்ரவரி 1ம் திகதி தம்புள்ள நீதிபதி முன் ஆஜர் செய்யப்பட்டிருந்தனர். இவர்களை நீதிபதி பொலிஸ் 'காவலில் வைக்கும்படி உத்தரவிட்டிருந்தார்.

இதனையடுத்து மார்ச் 12ம் திகதி இவ் வழக்கு மீண்டும் எடுக்கப்பட்டது. இவ்வேளை எதிர்தரப்பினர் குற்றம் சாட்டப்பட்ட இவ் ஐந்து பேரையும் பிணையில் விடுவதற்கு எதுவித ஆட்சேபனைகளையும் தெரிவிக்காததினால் கண்டி நீதிபதி இவர்களைப் பிணையில் செல்ல

# மகா கும்பாபிஷேகம்

(ஐ.எல்.ஜலீல்)

சிவபூமி எனப் போற்றப்படும் கிழக்கு இலங்கையில் பெரிய நீலாவணை எனும் கிராமத்தில் எழுந்தருளியுள்ள ஆலையடி ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தில் பரிவார மூர்த்தியாகிய நவக்கிரக நூதன மூர்த்திகளுக்கும், வசந்த மண்டபத்துக்கும், மணித் தூணுக்கும் விக்கிரம வருசம் பங்குனித் திங்கள் 13ம் நாள் திங்கட்கிழமை காலை 6 மணி 45 நிமிடம் தொடக்கம் 7மணி 41 நிமிடம் வரையுள்ள மீனலக்கினமும், ரேவதி நட்சத்திரமும் கூடிய சுபமுகூர்த்தத்தில் மகா கும்பாபிஷேகம்

# மார்ச் 24க்குப்பின் போரா, சமாதானமா? புலிகளின் அறிவிப்பினை ஆவலோடு எதிர்பார்க்கும் சமூகம்

பா.வேணுகோபால்

விடுதலைப்புலிகள் ஒரு தலைப்பட்சமாக அறிவித்திருந்த போர் நிறுத்தக் கால எல்லை மார்ச் 24ம் திகதி நள்ளிரவுடன் முடிவடைகின்றது. அதன்பின்னர் விடுதலைப்புலிகள் போர் நிறுத்தத்தை நீடிப்பார்களா? அல்லது சண்டையை தொடங்குவார்களா என்பதிலேயே நாட்டின் சமாதானம் தொங்கி நிற்கிறது. இது எவ்வாறு அமையப் போகிறது என்பதை அறிய தமிழ் சமூகம் தற்போது அவாக் கொணடுள்ளது.

விடுதலைப்புலிகள் பயங்கரவாதிகள் அவர்கள் சமாதானத்தை விரும்பாத ஒரு அமைப்பு நாங்கள். சமாதானக் கதவைத் திறந்து வைத்திருக்கும் போது புலிகள் சண்டையிடுகிறார்கள் என்றெல்லாம் பிரச்சாரம் செய்து வந்த அரசின் கூற்றுக்கு ஒரு ஆப்பு வைத்தாற்போல கடந்த வருடம் டிசம்பர் 24ம் திதகி விடுதலைப்புலிகள் ஒருமாதகாலப் போர்நிறுத்தத்தை அறிவித்திருந்தனர். இலங்கை இனப்பிரச்சினைக்கு சமாதானத்தை ஏற்படுத்தும் ஒரு நல்லெண்ண முயற்சியாக விடுதலைப்புலிகளின் போர் நிறுத்தம் அமைந்திருந்தது.

விடுதலைப்புலிகள் சமாதான நல்லெண்ண முயற்சியாக அறிவித்திருந்த போர் நிறுத்தத்தை சர்வதேச சமூகம் மற்றும் மதத் தலைவர்கள் சமாதான விரும்பிகள் போன்றோர் பாராட்டியிருந்தனர்.

அரசையும் புலிகளையும் சமாதான மேசைக்கு கொண்டுவரும் முயற்சியில் ஈடுபட்டு வரும் நோர்வேயின் சிறப்புத் தூதுவர் சொல்ஹெய்ம் கூட பாராட்டு தெரிவித்ததுடன் இந்த பொன்னான சந்தர்ப்பத்தைப்பயன்படுத்தி பேச்சுவார்த்தையை முன்னெடுக்கும் முயற்சியில் ஈடுபட்டார். ஆனால் இலங்கை அரசு புலிகள் பலவீனப்பட்ட நிலையில்தான் போர் நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர் எனக் கூறிக் கொண்டு சமாதானப் பேச்சுக்களை முன்னெடுக்காது தட்டிக்கழித்தனர்.

அதேவேளை விடுதலைப் புலிகளுடன் இலங்கை அரசு போர் நிறுத்தத்தை மேற்கொண்டு சமாதானப் பேச்சுக்களில் ஈடுபடவேண்டுமென அரசுக்கு ஆதரவு வழங்காத தமிழ்கட்சிகள் கோரிக்கை விடுத்தனர். அதேசமயம் வடக்கிலும் கிழக்கிலும் பல்கலைக்கழகம் உள்ளிட்ட சமூகம் சமாதானத்தை வலியுறுத்தி பொங்குதமிழ் உணர்வலைகளை வெளிப்படுத்தியிருந்தனர்.

ஆனால் சமாதானத்தை வலியுறுத்தி மேற்கொள்ளப்பட்ட நிகழ்வுகள் யாவும் புலிச் சாயம் பூசப்பட்டு மழுங்கடிக்கப்பட்டது.

இதற்கு எதிராக பேரினவாத சக்திகளின் இன்று தமிழருக்கு எதிராக இனத்துவேசமிடும் சிஹல உறுமய, ஜே.வி.பி.போன்ற கட்சிகள் தமிழ் மக்களின் உணர்வலைகளை கொச்சைப்படுத்தியதுடன் புலிகளை போர் மூலம் அழித்தொழிக்க வேண்டும் என கோசமிட்டனர்.

இதேவேளை அரசு போரை விரிவுபடுத்தலுக்கான நடவடிக்கையினை மேற்கொண்டதுடன் சர்வதேச ரீதியாக விடுதலைப்புலிகளை தடை செய்யும் நடவடிக்கையிலும் ஈடுபட்டது.

இந்த நிலையில் சமாதானப்பேச்சுவார்த்தையில் எதுவித முன்னேற்றமுமில்லாத கட்டத்தில் விடுதலைப்புலிகளின் மூன்றுமாத கால போர் நிறுத்தம் முடிவுத் தறுவாயில் நிற்கின்றது.

பேச்சுக்கள் முன்னேற்றம் ஏற்பட்டு சாதகமான ஒரு சூழ்நிலை தென்பட்டால் மாத்திரமே விடுதலைப்புலிகள் போர் நிறுத்தத்தை நீடிப்பர். அவ்வாறான ஒரு நிலை தோன்றாத பட்சத்தில மீண்டும் போர் முரசம் வடக்கு கிழக்கில் கொட்டத் தொடங்கக்கூடும்.

எனவே விடுதலைப் புலிகளின் அறிவிப்பிலேயே சமாதானம் தொக்கி நிற்கிறது என்பது மட்டும் உண்மை. போரா சமாதானமா?

தினக்கதிர் ஓராண்டு நிறைவையொட்டி

தினக்கதிர் ஆதரவுடன்

எருவில் இளைஞர் கழகமும்
கண்ணகி விளையாட்டுக் கழகமும்

இணைந்து நடாத்தும்

கலை, கலாசார போட்டியும் நிகழ்வுகளும்

போட்டிகள்.

1. பாடல்
1. கிராமியப் பாடல்கள்
2. நம்நாட்டுப் பாடல்கள்
3. கர்னாடக சங்கீதப் பாடல்கள்
4. தென்னிந்திய சினிமாப் பாடல்கள்

11. ஆடல்
1. கூத்து மற்றும் கிராமிய ஆடல்கள்
2. பரதம்
3. மேலைத்தேய ஆடல்

111. நடிப்பு

1V. அறிவிப்பாளர்

போட்டி நிபந்தனைகள்

★ வயதெல்லை கருத்திற் கொள்ளப்பட மாட்டாது.
★ அனைத்தும் தனிநபர் நிகழ்ச்சிகளே
★ ஒருவர் ஒன்றிற்கு மேற்பட்ட போட்டிகளிலும் கலந்து கொள்ளலாம். (விண்ணப்பங்கள் தனித்தனியே அனுப்பப்பட வேண்டும்)
★ போட்டிக்கான நுழைவுக்கட்டணம் 100/=(காசுக்கட்டளை மூலம் அனுப்பலாம்)
★ விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முடிவுத் திகதி : 30.03.2001
★ நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.

விண்ணப்பங்கள் மற்றும் 100/=க்கான காசுக்கட்டளை அனுப்ப வேண்டிய முகவரி:
செயலாளர்,
இளைஞர் கழகம்,
பாடசாலை வீதி,
எருவில் - களுவாஞ்சிகுடி

வெற்றியீட்டிய போட்டியாளர்களுக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

விண்ணப்பப்படிவம்

------------ இங்கே வெட்டவும் ✂------------

1. முழுப்பெயர் :-..............................
2. முகவரி : ..............................
..............................
..............................
3. அடையாள அட்டை இல: ..............................
4. கலந்து கொள்ளும் போட்டி: ..............................
(விபரமாகக் குறிப்பிடவும்) ..............................

போட்டி நிபந்தனைகளை நான் மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்வதுடன் போட்டி சிறப்பாக நடைபெற பூரண ஒத்துழைப்பு வழங்குவேன்.

திகதி:.................... ..............................
கையொப்பம்

இணை விளம்பர அனுசரணை:-
* சக்தி FM&TV
* IBS - களுவாஞ்சிகுடி

## கவிதைப் போட்டி!

மருதமுனையிலிருந்து ஈழபாரதி மருதூர் வாணரால் வெளியிடப்படும் 'சமாதானம்' சஞ்சிகை வழமை போல இம்முறையும் அகில இலங்கை ரீதியில் கவிதைப் போட்டியொன்றை நடாத்துகிறது.

புலவர்மணி ஆ.மு. ஷரிபுத்தீன். கவிஞர் பாண்டியூரன், கவிஞர் திலகம் எம்.எச்.எம். அஷ்ரஃப் ஆகியோரின் நினைவாக இடம் பெறும் இப்போட்டிக்கு கவிதைகள் எதிர்பார்க்கப்படுகிறது.

''நீதிகள் நிலை பெற வேண்டும்'' எனும் தலைப்பில் மரபுக்கவிதை 32 வரிகளுக்குள் எழுதப்படல் வேண்டும்.

''பெண்களுக்கு முதலிடம்'' எனும் தலைப்பில் புதுக் கவிதை 32 வரிகளுக்குள் இருக்க வேண்டும்.

கவர்ச்சியான பரிசில்கள் வழங்கப்படும்.

கவிதைகளை 24-04-2001 ஆம் திகதிக்கு முன்பதாக சமாதானம், ஈழபாரதி மருதூர் வாணர், 201A அல்ஹம்றா வீதி, மருதமுனை என்னும் விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.

## கருத்தரங்கு

### இது உங்கள் பக்கம்

இப்பகுதி வாசகர்களாகிய உங்களுக்கெனவே ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் சமூக, அரசியல், பொருளாதார, விஞ்ஞானம் மற்றும் கலை, இலக்கியம் சார்ந்த உங்களது கருத்துக்களையும் விமர்சனங்களையும் நீங்கள் எழுதலாம். இனி இது உங்கள் பக்கம்

ஆசிரியர்

# நிறம் மாறும் மனிதர்கள்

நாவலூர் சில் செல்வம்

நிலை மாறும் உலகில் நிலைக்கும் என்ற கனவில் நிறம் மாறிப் போகும் மனிதர்கள் மட்டக்களப்பு புறநகர் பகுதிகளில் காணக் கூடியதாகவே இருக்கின்றது. அதிலும் நாவற்குடா பகுதிகளில் மிக கூடுதலாக காண முடிகின்றது. இப்படியான மனிதர்கள் எம் நாட்டில் பல திசைகளிலும் சந்து பொந்தெல்லாம் வாழ்ந்தாலும் இந்த மனிதர்களின் வாழ்க்கைச் சக்கரம் மிக வேகமாகவே சுழன்று வேதனையாகவே முடிகின்றது.

நிறம் மாறாத மனிதர்களுக்கு இவர்கள் எப்போதும் வேடிக்கை பொருள்தான். ஏனெனில் இவர்கள் தனி சாம்ராஜ்யத்தில் இவர்களே நீதிபதிகள், மெல்ல மெல்ல மரணப்படுக்கைக்கு தங்களை தாங்களே தயார்படுத்திக் கொள்வார்கள். நாவற்குடா கிழக்கு பிரதேசம், நாவற்குடா தேவாலய விதிகள் தான் இவர்கள் நடமாடும் வாசஸ் தலங்கள்.

போதைக்காக அலையும் பேதமைக்கு கசிப்பு அரக்கனிடம் தஞ்சம் அடைந்து தன்மானத்தை விலை பேசும் தர்க்கவாதிகள் பொன் பொருளை இழந்து குடும்பத்தை தெருவுக்கு கொண்டுவரும் சுயநல சீமான்கள் கசிப்பு என்றால் இவர்களுக்கு தித்திப்பு.

அவலமான இம்மனிதர்களின் வாழ்வுக்கு நீதியான நியாயம் தேடுவது, யார்? சட்டத்துக்கு மண்ணைத் தூவி கசிப்பு காய்ச்சும் புண முதலைகளை சட்டத்தின் பிடிக்குள் சிக்கவைப்பது யார்? சமூக விரோதிகளின் சதுரங்கத்தில் அப்பாவி தொழிலாளிகள் உயிரை பணயம் வைக்கின்றனர். இது இப்படி இருக்க, மதுபானசாலைகள் வேறு சாலைக்கு சாலை திறக்கப்படுகின்றது. அனுமதியற்ற கள்ளுக் கடைகள் வீட்டுக்கு வீடு கசிப்பு வியாபாரம் பெருகிக் கொண்டிருக்கும்போது பின் தங்கிய மக்களின் மேன்மைக்கு வழியேது.

ஒரு தறிகெட்ட சமுதாயத்துக்கு கசிப்பு வியாபாரமே உறுதுணையாகும் போது அந்த சமுதாய மேம்பாடு என்பது கேள்விக்குறியாகிவீடுகின்றது. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தக்க நடவடிக்கை எடுக்கும் போது தான் நிம்மதிப்பெருமூச்சை விட முடிகிறது. அதிகாரிகளே ஒத்துழைப்பு வழங்கும் போது வெட்கப் படுவதா? வேதனைப்படுவதா?

# இளம் தாய் துகிலுரியப்பட்டு பொலிசாரால் சித்திரவதை

(மன்னார்)

ஐந்து பேரால் ஆடைகளை நீக்கிய பின் அடித்து சித்திரவதைப் படுத்தப்பட்டார் ஓர் இளம் தாய். திங்களன்று மன்னாரில் இயங்கும்(சி.எஸ்.யு) பொலிஸ் அமைப்பு 5 வயது பிள்ளையையும், அதனது தாயையும் உப்புக்குளத்திலுள்ள ''அஷிக்கா'' விடுதியில் வைத்து கைது செய்தது.

இதனையடுத்தே இவர்கள் தடுத்து வைத்து அவ் இளந்தாயை இவ்வாறு கொடுமைப் படுத்தியதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சிவமணி வீரக்கோன் எனும் பெயருடைய இவ் இளம் பெண் திங்கள் இரவு 11 மணியளவில் கைது செய்யப்படும் பொழுது இவரது கணவன் உடனிருக்கவில்லை. இவரோடு. விஜய கலாநாதன் எனும் பெயருடைய வேறு ஓர் இளம் பெண்ணும் அதே விடுதியில் இருந்து கைது செய்யப்பட்டுள்ளார்.

தற்போது இம் மூவரும் மன்னார் நகரத்தில் உள்ள சி.எஸ்.யுவில் தடுத்து வைக்கப் பட்டுள்ளார்கள்.

வவுனியாவில் வேறு ஓர் பெண்ணோடு வாழ்ந்து வந்த தனது கணவனைப் பார்ப்ப தற்காக மன்னார் வந்த இவ் இளம் தாய் வவுனியா சென்று தனது கணவனை சந்தித்த பின் அவரால் மன்னாருக்கே திருப்பியனுப்பப்பட்டார். இவர் தங்கியிருந்த விடுதியில் இவரது கணவராலேயே பதிவு செய்து கொடுக்கப்பட்டுள்ளது. இவரை மார்ச் மாதம் 13ம் திகதி விடுதியில் கொண்டு வந்து விட்ட இவரது கணவன் உடனேயே வவுனியா திரும்பி விட்டார்.

இதே போல் இவரோடு கைது செய்யப்பட்ட மற்றய இளம் பெண்ணின் கணவரும் இவர் கைது செய்யப்படும் பொழுது அருகில் இருக்கவில்லை.

இது விடயமாக கருத்துத் தெரிவித்த மன்னார் மனித உரிமைகள் நிலையம் ''இவ் வாறு வுவுனியாவில் இருந்து மன்னார் வரும்,இளம் பெண்கள் அடிக்கடி சி.எஸ்.யு.வினால் கைது செய்யப்பட்டு சித்திரவதைப்படுத்தப்படுகிறார்கள் என தெரிவிக்கின்றது.




# இந்திய அணி சிறப்பான ஓட்டங்களைப் பெற்றது!

(சென்னை)

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் இந்தியா சிறப்பான ரன்குவிப்பு செய்தது. ஹர்பஜன்சிங பந்துவீச்சில் ஆஸ்திரேலிய அணி 391 ரன்னில் ஆட்டம் இழந்தது.

கொல்கத்தா கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில் ஹர்பஜன் செய்த ஆதிக்கம் சென்னை டெஸ்ட் போட்டியிலும் நீடித்தது. சுழல்பந்து வீச்சுக்கு சாதகமாக இருக்கும் சென்னை ஆடுகளத்தில் ஆஸ்திரேலியா முதல் நாள் முடிவில் 3 விக்கெட் இழப்புக்கு 326 ரன் குவித்தது. ஆனால் 2-வது நாள் ஆட்டம் தொடங்கிய சிறிது நேரத்திலேயே ஆஸ்திரேலிய விக்கெட் சரிவு தொடங்கி விட்டது. ஆஸ்திரேலிய காப்டன் ஸ்டீவ்வாக் ஆட்டம் இழந்தது இந்திய அணிக்கு உற்சாகம் அளித்தது. மும்பை மற்றும் கொல்கத்தா போட்டிகளில் ஆஸ்திரேலிய அணியின் ஸ்கோர் உயர்வுக்கு வழிவகுத்த ஸ்டீவ்வாக் நேற்றைய நாளில் 47 ரன் பெற்ற போது விக்கெட்டை பறிகொடுத்தார்.

ஹர்பஜன்சிங் வீசிய பந்து ஸ்டீவ்வாக் காலில் பட்டது. எல்.பி.டபிள்யு அவுட்டுக்கு இந்திய வீரர்கள் முறையிட்டனர். ஆனால் அதே சமயம் பந்து ஸடம்பை நோக்கிச் சென்றது. கொஞ்சமும் யோசிக்காத ஸ்டீவ் வாக் பந்தை கையால் தடுத்து நிறுத்தி விட்டார். இதனால் கிரிக்கெட் விதிப்படி, ஸ்டீவ் வாக் ஆட்டம் (ஹேண்டிலிங தி பால்) இழக்க வேண்டிய பரிதாபம் ஏற்பட்டது. சர்வதேச கிரிக்கெட் அரங்கில் இது போன்று இதற்கு முன்பு 5 வீரர்கள் ஆட்டம் இழந்துள்ளனர். ரசல் எடின் (தென் ஆப்பிரிக்கா), ஹடில்ச் (ஆஸ்திரேலியா), மோஷின்கான் (பாகிஸ்தான்), டெஸ்மான்ட் ஹெயின்ஸ் (மேற்கு இந்தியதீவு) மற்றும் கிரகாம் கூச் (இங்கிலாந்து) ஆகியோர் இதுபோன்று ஆட்டம் இழந்துள் ளனர். இந்திய மண்ணில் ஹெய் ன்சுக்குப் பிறகு ஸ்டீவ்வாக் பந்தை கையில் பிடித்து விக் கெட்டை பறிகொடுத்துள்ளார்.

## பாண்டிங ஏமாந்தார்

ஸ்டீவ்வாக் ஆட்டம் இழந்த அடுத்த பந்திலேயே ரிக்கி பாண்டிங ஸ்டம்பிங முறையில் ஆட்டம் இழந்தார். முந்தைய இரு இன்னிஙசிலும் ரன் எடுக்காமல் ஆட்டம் இழந்த விக்கெட் கீப்பர் கில்கிறிஸ்ட் நேற்றைய ஆட்டத்தில் டக் அவுட்டில் இருந்து தப்பினார். ஆனாலும் சிக்கலில் தவித்த ஆஸ்திரேலிய அணிக்கு கில்கிறிஸ்ட் ஆட்டம் கைகொடுக்கவில்லை. ஒரு ரன் எடுத்த நிலையில் கில்கிறிஸ்டும் பெவிலியன் திரும்பினார். இதையடுத்து களம் வந்த ஆஸ்திரேலிய வீரர்கள் வந்த வேகத்தில் பெவிலியன் திரும்பினர். முடிவில் ஆஸ்திரேலியா 391 ரன்னுக்கு முதல் இன்னிஙசில் ஆட்டம் இழந்தது.

## ஹெய்டன் இரட்டை சதம்

ஆனால் தொடக்க வீரர் ஹெயடன் எதிர்பார்த்தபடி இரட்டை சதம் எடுத்தார். டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் ஹெய்டன் பெற்ற அதிகபட்ச ஸ்கோர் இதுவாகும். சென்னை மைதானத்தில் ஆஸ்திரேலிய வீரர் பெற்ற 2-வது அதிகபட்ச ஸ்கோர் இதுவாகும். முன்னதாக கடந்த 1986-ம் ஆண்டு ஆஸ்திரேலிய வீரர் டீன் ஜோன்ஸ் 210 ரன் குவித்துள்ளது குறிப்பிடத்தக்கது. அதுமட்டுமின்றி இந்தியாவுக்கு எதிராக இரட்டை சதம் எடுத்த 6-வது ஆஸ்திரேலிய வீரர் என்ற பெருமையைய,ம் ஹெயடன் பெற்றார். முன்னதாக பிராட்மென், கிரேக் சேப்பல், கியூஸ், ஜஸ்டின் லாங்கர் மற்றும் டீன் ஜோன்ஸ் ஆகியோர் இரட்டை சதம் எடுத்த வீரர்கள் பட்டியலில் இடம் பெற்றுள்ளனர்.

## ஹர்பஜன்சிங 7 விக்கெட்

இந்திய பந்துவீச்சாளர் ஹர்பஜன் சிங் மீண்டும் தனது முத்திரையை பதித்து விட்டார். முதல் இன்னிங்சில் அவர் 133 ரன் விட்டுக்கொடுத்து 7 விக்கெட்டுகள் சாய்த்தார். நேற்றைய நாளில் மட்டும் 12.2 ஓவர்கள் பந்துவீசிய ஹர்பஜன் 33 ரன்னுக்கு 6 விக்கெட்டுகள் கைப்பற்றியது குறிப்பிடத்தக்கது. கொல்கத்தா டெஸ்ட் போட்டியின் 2-வது இன்னிங்சிலும் ஹர்பஜன் சிங் 7 விக்கெட் கைப்பற்றினார். இதையடுத்து இந்திய அணி தனது முதல் இன்னிங்ஸ் பேட்டிங்கை தொடங்கியது.

## இந்தியா சிறப்பான ஆட்டம்

மும்பை மற்றும் கொல்கத்தா டெஸ்ட் போட்டிகளில் தொடக்க வீரர்கள் செய்யத் தவறிய பணியை சென்னை போட்டியில் சரியாக செய்தனர். ரமேஷ் மற்றும் தாஸ் இருவரும் மிகவும் சிறப்பாக ஆடி முதல் விக்கெட்டுக்கு 123 ரன் குவித்தனர். தற்போது நடக்கும் ஆஸ் திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் பயணத்தில் முதல் விக்கெட்டுக்கு இந்திய வீரர்கள் குவித்த அதிகபட்ச ஸ்கோர் இதுவேயாகும். முன்னதாக கொல்கத்தா டெஸ்ட் போட்டியின் 2-வது இன்னிங்சில் ரமேஷ்-தாஸ் ஜோடி அதிகபட்சமாக 52 ரன் பெற்றனர்.

## லட்சுமண் அதிரடி

61 ரன்கள் பெற்ற நிலையில் ரமேஷ் ஆட்டம் இழந்ததும் சாதனை நாயகன் லட்சுமண் களம் வந்தார். கொல்கத்தா போட்டியில் இரட்டைசதம் அடித்து இந்தியாவை வெற்றி பெற வைத்த சாதனைக்கு சொந்தக்காரரான லட்சுமண் நேற்றைய ஆட்டத்தில் மிகவும் விறுவிறுப்பாக ரன் குவித்தார். இதனால் 2-வது நாள் முடிவில் லட்சுமண் 59 ரன்னுடன் ஆட்டம் இழக்காமல் இருந்தார். 69 பந்துகளை எதிர்கொண்ட லட்சுமண் 10 பவுண்டரிகள் விளாசியது குறிப்பிடத்தக்கது. மில்லர் வீசிய ஒரு ஓவரில் மட்டும் லட்சுமண் 4 பவுண்டரிகள் விளாசினார். மற்றொரு முனையில் தாஸ் 84 ரன்களுடன் ஆட்டம் இழக்காமல் உள்ளார். இந்திய் அணி 211 ரன்னுக்கு ஒரு விக்கெட் மட்டும் இழந்து வலுவான நிலையில் இருக்கிறது. தற்போது வரை இந்தியா 180 ரன் பின் தங்கி உள்ளது. இன்னும் 3 நாட்கள் ஆட்டம் எஞ்சி இருப்பதால் இந்தப் போட்டியில் நிச்சயம் ஒரு முடிவு கிடைக்கும் என்று நம்பலாம்.

ஆஸ்திரேலியா-391
ஸ்லேட்டர் (கா) லட்சுமண் (ப)
ஜாகீர்கான்-04
ஹெய்டன் (கா) கங்குலி (ப)
ஹர்பஜன்சிங்-203



மட்/செங்கலடி மத்திய கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டியில் முதன்மை விருந்தினராக கலந்து கொண்ட மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் உரையாற்றுவதையும், அருகில் வலயக்கல்விப் பணிப்பாளர் சி.நாகேந்திரம் கல்லூரி அதிபர்.வ.கந்தசாமி, திருமதி சுகுணம் ஜோசப் பரராஜசிங்கதம் அமர்ந்திருப்பதையும். விநோத உடைப்போட்டியில் பங்கு பற்றிய மாணவர்களையும், பெற்றார்கள் போட்டி ஒன்றில் மும்மூரமாக ஈடுபட்டுக் கொண்டு இருப்பதையும், வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பிரதிக்கல்விப்பணிப்பாளர் எம்.ஐ.சேகுஅலி சான்றிதழ்களை வழங்குவதையும் படங்களில் காணலாம்.

# வாசகர் நெஞ்சம்

## ஓராண்டு பூர்த்தி செய்யும் உயிரான தினக்கதிரே!

என் உயிருக்கு உயிரான
தினக்கதிரே
நீ கொண்டு வரும் அம்சங்கள்
அத்தனையும் நன்று
அரசியல் கட்டுரைகள் அபாரம்
அதிலும் மிகவும் மகிழ்ச்சியானது
எறிகணை ஏகாம்பரத்தின் கதையே கதை!
செய்திச்சுருக்கம் என்னும் தலைப்பில்
தரும் அம்சங்கள் அனைத்தும் நன்று தினக்கதிரே!
உலகம் வலம் வந்து அனைத்து அம்சங்களையும்
தருகின்றாயே தினக்கதிரே!
நீ ஓராண்டு பூர்த்தி செய்ய போகின்றாயே
தினக்கதிரே மிக்க சந்தோசம்!
மென்மேலும் வளர்ச்சி பெற
வாழ்த்துகின்றேன் தினக்கதிரே!

**க.மணிவண்ணன்**
**மாரியம்மன் கோயில் வீதி**
**ஆரையம்பதி - 02**

## மகிழூர்முனை உபதபால் நிலையத்திற்கு தொலைபேசி இணைப்பு வழங்கப்படுமா?

களுவாஞ்சிகுடி பிரதேசத்திற்குட்பட்ட மகிழூர்முனை கிராமத்தில் உள்ள உபதபால் நிலையம் சென்ற ஐ.தே.க அரசாங்க காலத்தில் இருந்து செயல்பட்டு வருகிறது. இங்கு முக்கிய தேவையான தொலைபேசி வசதி இன்று வரை இணைக்கப்படவில்லை. இதனால் இங்குள்ள மக்கள் களுவாஞ்சிகுடி போன்ற துார இடங்களுக்கு சென்று தான் இவ்வசதியை பெற வேண்டி உள்ளது. தற்போது நாட்டின் சகல கிராமப்புற உபதபால் நிலையங்களுக்கும் இத்தொலைபேசி இணைப்பை வழங்கப் போவதாக அரசு அறிவித்துள்ளது. மிகவும் வரவேற்கக்கூடியது.

ஆகவே மகிழூர்முனையில் மாத்திரம் இன்றி பக்கத்தில் உள்ள ஏனைய கிராமங்களிலும் இவ்வசதி இல்லாதிருப்பதை கருத்தில் கொண்டு மேற்படி மகிழூர்முனை உபதபால் நிலையத்திற்கு இத்தொலைபேசி வசதியை இணைப்பதின் மூலம் சம்பந்தப்பட்ட மக்களின் நீண்டநாள் கோரிக்கை நிறைவு பெறும் இதை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஆவன செய்ய வேண்டும் என தயவாகக் கேட்டுக் கொள்கிறேன்.

**கோடீஸ்**
**மகிழூர்முனை**

## நோய்வருமுன் காப்போம்!

களுவாஞ்சிகுடியை அண்டிய பகுதிகளில் நுளம்புத் தொல்லை அதிகரித்துள்ளது. இதனால் மலேரியா நோய் ஏற்படுமா என்ற பயம் ஏற்பட்டுள்ளது. இதனை தடுப்பதற்கு பல ஆண்டுகளுக்கு முன்னர் சுகாதாரப் பகுதியினரால் மலத்தீன் மருந்து வீடு வீடாக விசிறப்பட்டு வந்தது. அதனால் நுளம்புத் தொல்லை குறைவடைந்தது. ஆனால் தற்போது பல வருடங்களாக களுவாஞ்சிகுடிப்பகுதியில் மலத்தீன் மருந்தோ, அல்லது ஏனைய தெளி பொருட்களோ விசிறப்படுவதில்லை. இதனால் ஒவ்வொரு இரவும் மக்கள் நுளம்புத் தொல்லைக்கு ஆளாகின்றார்கள். நுளம்பைக் கட்டுப்படுத்த மின் விசிறி, நுளம்புச் சுருள்களை பயன்படுத்தியும் எவ்வித பலன்களும் கிடைக்கவில்லை. எனவே சம்பந்தப்பட்ட சுகாதார அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

**-எழுவான்-**

## தனியார் பஸ்களில் வித்தியாசமான கட்டணம்

மட்டக்களப்பு, கல்முனை பகுதிகளில் சேவையிலீடுபடும் தனியார் பஸ்கள் ஒவ்வொன்றும் பொதுமக்களிடம் இருந்து ஒவ்வொரு கட்டணத்தை அறவிடுவதாக பொது மக்கள் புகார் தெரிவிக்கின்றார்கள். குறிப்பிட்ட தூரத்திற்கு ஒரு பஸ் குறைவாகவும் இன்னுமொன்று கூடுதலாகவும் கட்டணத்தை அறவீடு செய்வது பொருத்தமற்ற செயலாகும். தனியார் பஸ் சங்க நிருவாகமே இதற்கு பொறுப்புச் சொல்ல வேண்டிய கடமையுள்ளது. நீங்கள் பொது மக்களுக்கு கட்டண விபரங்களை பகிரங்கமாக வெளியிட்டு மக்களின் அசௌகரியங்களை தவிர்க்க வேண்டும்.

**மயூரவதனன்**
**களுவாஞ்சிகுடி**

# பயிற்சிக்கு சென்ற இளைஞர்கள் படையினரால் அனுமதி மறுப்பு!

(அரியம்)

## தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் இளைஞர் கழகத்தின் தலைமைத்துவப் பயிற்சிக்காக சென்ற இளைஞர் யுவதிகளுக்கு பாதுகாப்பு படையினரால் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள சுமார் ஒன்பது பிரதேச செயலகப் பிரிவில் உள்ள தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் இளைஞர் யுவதிகள் ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவிலும் இருந்து இருபது பேர் ஆயித்தியமலை கிறிஸ்த்தவ தேவாலயத்தில் சென்று மூன்று நாள் பயிற்சி முகாமிற்க்கு மட்டக்களப்பு மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்ற உதவிப் பணிப்பாளரால் அழைக்கப்பட்டிருந்தன.

இப் பயிற்சி நெறி நேற்று 20ம் திகதி தொடக்கம் 22ம் திகதி வரையும் இடம் பெற இருந்தது.

இப் பயிற்சி நெறிக்காக நேற்று முன் தினம் வவுணதீவு,செங்கலடி ஊடாகச் சென்ற இளைஞர்களை இராணுவத்தினர் தடுத்து நிறுத்தினர் ஆயித்தியமலைப் பகுதி விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி எனவும் அங்கு இவ்வாறான பயிற்சி முகாம் நடாத்துவதற்க்கு அனுமதி வழங்கப்படவில்லை எனவும் படையினர் கூறினர்.

தாம் இதையிட்டு சம்பந்தப்பட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்ற உதவிப் பணிப்பாளரிடம் முறையிட்ட போது தாம் ஆயித்தியமலை இளைஞர் கழக தலைமைத்துவப் பயிற்சி இடம் பெறுவது பற்றியும் அப்பயிற்சிக்கு செல்லும் இளைஞர்களின் பெயர் விபரப் பட்டியலை மட்டக்களப்பு படைதரப்பு தலைமையகத்திடம் கொடுத்ததாக கூறினர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள களுவாஞ்சிகுடி, ஆரையம்பதி, மண்முனை வடக்கு ஏறாவூர் தமிழ்பிரிவு, வாழைச்சேனை செங்கலடி பகுதியில் இருந்து சென்ற சுமார் 120 இளைஞர்களே இவ்வாறு திரும்பி அனுப்பப்பட்டனர்.

எனினும் வெல்லாவெளி,பட்டிப்பளை,வவுணதீவு, ஆகிய மூன்று பிரதேச செயலகப் பிரிவில் உள்ள 60 இளைஞர்களுக்கு மட்டும் இளைஞர் கழக தலமைத்துவப் பயிற்சி ஆயித்தியமலை தேவாலயத்தில் கிறிஸ்தவ இடம் பெற்று வருவதாக இளைஞர் சேவைகள் மன்ற உத்தியோகத்தர் தினக்கதிருக்கு தெரிவித்தார்.

## பட்டிருப்பு மகாவித்தியாலய க.பொ.த.(சா.த)பெறுபேறுகள்

(நமது நிருபர்)

பட்டிருப்பு மகாவித்தியாலயத்தில் கடந்த ஆண்டு க.பொ.த.(சா.-த)பரீட்சைக்குக் தோற்றிய 108 மாணவர்களில் 70பேர் உயர்தரக் கல்வியைத் தொடரத் தகுதிப் பெற்றுள்ளனர். இவர்களுள் 42 பேர் விஞ்ஞானப் பிரிவுக்குரிய தகுதியைப் பெற்றுள்ளனர்.

அதிவிஷேட சித்தி பெற்ற மாணவர் விபரம் வருமாறு பத்துப் பாடங்களில் ந.பிரஷாந்தினி, எட்டுப் பாடங்கள் கோ.ச்சிதரன், ப.விவிதா, ஏழு பாடங்கள் முகுந்தன்,ஆறு பாடங்கள், மா.விஜிருபன்,ஆறு பாடங்கள் அ.அபர்ணா.

## சமுர்த்தி ......

அவருக்கு இருந்ததாக எமக்குத் தெரியவில்லை அவரின் விருப்பத்தின் பேரில் வெளிநாடு செல்வதற்கான ஏற்பாடுகளையும் செய்திருந்ததாகவும் உற வினர்கள் தெரிவித்தார்கள். எனினும் இவரது தற்கொலைக்கான காரணம் இதுவரை அறியப்படவில்லை.

## வழிப்பறி .......

ணையும் 27ம் திகதி வரை விளக்க மறிய லில் வைக்குமாறு அக்கரைப்பற்று நீதிமன்ற நீதிபதி கே.தட்சணாமூர்த்தி நேற்று உத்தரவிட்டுள்ளார்.

தமன பொலிஸார் இந்த இரண்டு பெண்ணையும் நீதிமன்றில் ஆஜர் செய்தனர். இவர்கள் வீதியில் சென்றவர்களை தாக்கியே 50 ஆயிரம் ரூபா பணம் மற்றும் தங்க மாலை ஒன்றையும் அபகரித்த தாக இவர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

## போலி நோட்டு வழக்கு கொழும்புக்கு மாற்றம்

(ஏறாவூர் நிருபர்)

அக்கறைப்பற்று நகரில் கடந்த வருடம் டிசம்பர் மாதம் போலியாக கருதப்பட்ட பண நோட்டுக்கள் தொடர்பான வழக்கு விசாரணையினை கொழும்பு மேல் நீதிமன்றில் தொடருமாறு அக்கரைப்பற்று நீதிமன்ற நீதிபதி கே.தட்சணாமூர்த்தி நேற்று உத்தரவிட்டுள்ளார்.

இச் சம்பவம் தொடர் பாக சிங்களத் திரைப்பட இயக்குனர் ஒருவர் உட்பட 8 பேர் சந்தேகத்தின் பேரில் அக்கரைப்பற்றுப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர். கைப்பற்றப்பட்ட பண நோட்டுக்கள் தொடர்பாக மத்திய வங்கி ஆளுனரிடம் இருந்து கிடைக்கப்பெற்ற அறிக்கையினை அடுத்து வழக்கு விசாரனையினை மேல் நீதிமன்றில் மேற் கொள்ள நீதிபதி தட்சணா மூர்த்தி உத்தரவிட்டார்.

## பொது மகன்.........

மே.மாதம் வீதியில் சென்று கொண்டிருந்த சிறிய'வான்' ஒன்றுடன் இராணுவத்தினரின் யுனெஸ்கோ ரக 'பவள்' வாகனம் ஒன்று மோதியதால் காயமடைந்த செ.வீரசிங்கம் என்பவர் சார்பில் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டிந்த வழக்கு நேற்று முன் தினம் (20.03.2001) விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

மேற்படி சாரதிக்கு எதிராக ஐந்து குற்றச் சாட்டுகள் முன் வைக்கப்பட்ட நிலையில் மனுதாரர் சார்பில் ஆஜரான வழக்கறிஞர் எஸ்.இளையராஜா மனுதாரருக்கு காலில் முறிவு ஏற்பட்டதால் நட்ட ஈடாக 25,000 வழங்கப்பட வேண்டும் எனக் கோரியிருந்தார்.

எதிரி சார்பில் சட்டித் தரணிகள் சி.ரீ.சச்சிதானந்தம் டி.பாலசுந்தரம் ஆகியோர் ஆஜராகியிருந்தனர்.

வழக்கை விசாரித்த நீதிபதி ஏ.எல்.அப்துல்கபூர் மனுதாரருக்கு 5000 அபராதம் செலுத்தப்பட வேண்டும் எனவும் அத்துடன் அரச செலவாக 6000 செலுத்தப்பட வேண்டும் எனவும் உத்தரவிட்டார்.

## தமிழர் .........

மனித உரிமை ஆணைக் குழுவுக்கு மனு ஒன்றினை அனுப்பிவைத்துள்ளது.

அந்த மனுவில் தெரிவிக் கப்பட்டுள்ளதாவது.

அரச பயங்கரவாதம் மனித உரிமை மீறல்கள் பொருளாதாரத் தடை போன்றவற்றிக்கு இலங்கை அரசு தான் காரணம் எனத் தெரி வித்துள்ளனர்.

## பொலிஸார் இரத்த தானம்

(எஸ்.கமலதாஸன்)

மட்டக்களப்பில் பொலிஸ் தினத்தையொட்டி காத்தான் குடி பொலிஸாரால் ஏற்பாடு செய்யப்பட்ட இரத்ததான வைபவம் காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் நேற்று நடைபெற்றது இவ் வைபவத்திற்கு இராணுவத்தினர் உட்பட்ட பலரும் இரத்ததானம் செய்தனர்.அத்துடன் ஆரையம்பதியில் வரதன் தலைமையிலான 15பேர் அடங்கிய குழுவும் காத்தான் குடி பொலிஸ் நிலையம் சென்று இர்த்ததானம் செய்தது குறிப்பிடத்தக்கது

## இந்து சமய .............

கைது செய்யப்பட்ட விடுதலைப் புலிச் சந்தேக நபரான தன்ராணியின் நாட்குறிப்பில் இவரது பெயர் இருந்ததாக கூறி சந்தேக நபர் குறித்த தகவல் வழங்கத் தவறினார் என்று குற்றச்சாட்டப்பட்டு அவசரக் கால சட்ட விதிகளின் கீழ் கைது செய்யப்பட்ட தெய்வநாயகம் சில மாதங்கள் 4வது மாடியிலும் தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டிருந்தார்.

8 மாதங்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டு பிணையில் விடுதலை செய்யப்பட்ட இவர் குறித்த வழக்கு கொழும்பு உயர் நீதிமன்றத்தில் நேற்று நடைபெற்றது.

உயர் நீதிமன்ற நீதிபதி வழக்கை விசாரித்த எஸ்.ஸ்ரீஸ்கந்தராஜா இவர் மீதான குற்றச்சாட்டுகளுக்கு ஆதாரம் எதுவும் இல்லை என்பதால் வழக்கைத் தள்ளுபடி செய்து தெய்வநாயகத்தை விடுதலை செய்தார்.

-தெய்வநாயகம் சார்பில் வழக்கறிஞர் ஏ.சிவானந்தா (முன்னாள் நீதியரசர்) தலைமையில் ஏ.ஜெய்க்குமார் டி.சந்திரதாஸ் ஆகியோர் வாதாடினார்கள்

## இறந்த புலிகள் பற்றி அறிவிப்பு

(நமது நிருபர்)

முல்லைக் கடலில் இடம் பெற்ற கடற் படை தாக்குதலில் பலியான புலிகளின் விபரங்களை புலிகளின் வானொலி நேற்று அறிவித்துள்ளது.

மேஜர் தென்றல் என அழைக்கப்படும்,மட்டக்களப்பைச் சேர்ந்தவினாயகம் மகேந்திரன், மேஜர் கலா என அழைக்கப்படும் யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த மார்க்கண்டு காஞ்சனா, கப்டன் மறவன் என அழைக்கப்படும் சின்னத்தம்பி கதிர்காமநாதன் ஆகியோர் பலியாகியுள்ளதாக அந்த வானொலி அறிவித்துள்ளதாக வன்னிச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## தேவை ஏற்படின் இந்தியாவின் உதவி நாடப்படும்

(நமது நிருபர்)

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் நடைபெற போகும் பேச்சுவார்த்தையின் போது அவசியம் ஏற்பட்டால் மத்தியஸ்த முயற்சிக்கு இந்தியாவையும் அழைக்கப் போவதாக ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டுச் சுற்றுப் பயணம் மேற் கொண்டிருக்கும் ஜனாதிபதி ஜெர்மன் சென்றிருந்த போது அங்கு சஞ்சிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியின் போதே மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பேச்சுக்கள் இன்னும் இரு மாதத்துக்குள் நடைபெறலாம் அதற்கான முயற்சிகள் தற்போது மேற் கொள்ளப்பட்டு வருகிறது.

இதே சமயம் தமிழ் குழுக்களிடையே தமிழீழ விடுதலைப் புலிகளே செல்வாக்குமிக்கவர்களாக விளங்குகின்றனர்.ஆனால் சகல தரப்பினரையும் அவர்கள் பிரதிநிதித்துவப்படுத்தவில்லை எனத் தெரிவித்தார்.

## வன்னியில் போர்.....

கியதுடன் மக்கள் குடியிருப்புகள் தீப்பற்றி எரிந்து சம்பவம் நடந்த பகுதி புகை மண்டலமாகவும் அவலக்குரல்கள் எழுந்து காணப் பட்டன.

இத்தாக்குதலில் கொல்லப்பட்டவர்களின் விபரம் வருமாறு

குருசடி சுண்டிக்குளத்தைச் சேர்ந்தவர்களான தம்பி ஐயா ரவிராசா(36), அவருடைய மனைவி (30) ரவிராசா ரேணுகா,(35) குலசேகரம் தங்கவேல், மாரியம்பிள்ளை புலோமினா(50) ஆகியோரே பலியானவர்கள்.

காயமடைந்தவர்களின் விபரம் வருமாறு:-

வேலுப்பிள்ளை சஜந்தன், முத்துராசா ஐயாத்துரை, விசுவலிங்கம் ஜீவா,பொன்னம்பலம் இலக்கிய வசந்தி,ஆனந்தராசா ஜீவன்,சிவலிங்கம் மலர்,ஜெயச்சந்திரன் வாசுகி, இளையத்தம்பி வாசுகி, செல்லையா வாசுகி ஆகியோரே காயமடைந்துள்ளனர். இவர்கள் புதுக்குடியிருப்பு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

புதுமாத்தளம் பகுதியில் நடத்தப்பட்ட தாக்குதலில் யாழ் மாவட்ட இம்புறுட்டியைச் சேர்ந்தவரும் விக்னம் குடியிருப்பு புதுமாத்தளம் பகுதியை வசிப்பவரான மூன்று வயதுடைய கோணேஸ்வரன் புஸ்பராசா, இரணப்பாலையைச் சொந்த முகவரியாகவும் புதுமாத தளம் பகுதியில் வசிப்பவருமான நான்கு பிள்ளைகளின் தந்தையான (33)வயதுடைய அந்தோனிப்பிள்ளை ஜெயச்சந்திரன் ஆகியோர் படுகாயமடைந்துள்ளனர்.

இந் தாக்குதலிலும் பல ஏழை மீனவர்களின் படகுகளும் எரிந்து நாசமாகியுள்ளதுடன் புதுமாத்தளம் விக்னம் குடியிருப்பில் உள்ள வீடுகள் பல எரிந்து நாசமாகியுள்ளன.

சம்பவம் நடந்த இடத்திலிருந்து அபயக்குரல் எழுப்பியவாறு மக்கள் ஆனந்தபுரம் இரணப்பாலை புதுக்குடியிருப்பு பகுதிகளுக்கு இடம் பெயர்ந்து உள்ளனர் என வன்னிச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## மாந்தீவு..........

மேற்படி வைத்தியசாலையை மூடாது நிறுத்துமாறு அவ்வாறு மூடும் பட்சத்தில் அதனை சுகாதார அமைச்சின் கீழ் வேறு வைத்திய சேவைக்காக பயன்படுத்த வேண்டும் எனத் தெரிவித்தார்.

இது தொடர்பாக தமக்கு எதுவும் தெரியாதென்றும் தொழுநோயாளர் வைத்தியசாலை மூடுவது தொடர்பாக அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்குமாறு தாம் கேட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் தம்மிடம் தெரிவித்ததாக ஜோசப் எம்.பி. தினக்கதிருக்குத் தெரிவித்தார்.

இப்பொழுது காண்பிக்கப்படுகிறது
மட்டக்களப்பு
சாந்தி
10.30, 2.00, மற்றும் சனி, ஞாயிறு தினங்களில் 5.00
மாதவனின்
மின்னலே.....

விற்பனைக்கு உண்டு
மட்டக்களப்பு புனித அந்தோனியார் வீதியில் சகல வசதியுடன் கூடிய மாடி வீடும் கடையும் விற்பனைக்குண்டு
36, பிரதான வீதி,
மட்டக்களப்பு.
தொ.பே. 065-23322 Advt.

இப்பத்திரிகை வேல்ட் வொயிஸ் பப்ளிகேஷன் நிறுவனத்தினால் ஈஸ்ரன் கிராபிக்ஸ் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.